(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

**இல. 2 (6)]**

# பாராளுமன்றம்

## 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2008, திசெம்பர் 19, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2009, சனவரி 06, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0752/ '08

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கம்பஹா மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2007 ஆம் ஆண்டு வரை எல்லா வருடங்களிலும் ஜூன் 30 ஆம் திகதி அன்று தகைமை பெறும் சமுர்த்தி பெறுநர்களின் எண்ணிக்கை யாது,

(ii) இவ்வாறு தகைமை பெற்றவர்களுக்கு செலுத்தப்பட்ட தொகை, அவர்களின் பெயர் மற்றும் முகவரி ஆகியவை யாவை,

(iii) 2004, 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் சமுர்த்தி பெறுநர்களுக்கு செலுத்தப்பட்ட தொகை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட வருடங்களில் சமுர்த்தி பெறுநர்களாக இருந்து பின்னர் நீக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயர், முகவரி ஆகியவை யாவை,

(ii) இவ்வாறு நீக்கப்பட்டது எவ்வடிப்படையில்,

(iii) புதிதாகச் சேர்ந்த சமுர்த்தி பெறுநர்கள் இருப்பின் அவர்களுக்குச் செலுத்தப்பட்ட தொகை, அவர்களின் பெயர், முகவரி ஆகியவை யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0888/ '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆராச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) மீகொட, கொடகம, பெல்பொலவத்த, சமாதி மாவத்தை மற்றும் கிரிமெட்ட பாதை என்ற இரு இடங்களில் நிகழ்ந்துள்ள விபத்துகளின் காரணமாக புகையிரத பாதுகாப்புக் கடவை அல்லது மின்சார சமிக்ஞை விளக்கு ஒன்று தேவை என்பதை ஹோமாகம பிரதேச சபையும் பிரதேசவாசிகளும் எழுத்து மூலம் அறிவித்துள்ளனரென்பதையும்,

(ii) அதற்குப் பதிலளிக்குமுகமாக 2008.04.30ஆம் திகதியிட்ட கடிதமொன்று அவருக்கு ஒரு பிரதியுடன் புகையிரத பொதுமுகாமையாளரால் ஹோமாகம பிரதேச சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) அக்கடிதத்தின் 2வது பந்தியில், புகையிரத பாதைக்குக் குறுக்காக உள்ள பாதையில் பயணம் செய்கின்ற பயணிகளுக்குப் பாதுகாப்பு வழங்க புகையிரத திணைக்களத்திற்கு எவ்வித தேவையும் இல்லை எனவும்,

(ii) 3வது பந்தியில், புகையிரத பாதைக்குக் குறுக்காக உள்ள பாதையில் பயணம் செய்கின்ற வாகன ஓட்டுனர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கான பொறுப்பு புகையிரத திணைக்களத்திற்கு இல்லை எனவும்,

(iii) 4வது பந்தியில், புகையிரத திணைக்களம் அதற்காகக் கொள்கைத் தீர்மானமொன்றை எடுத்துள்ளதெனவும்

குறிப்பிடப்பட்டுள்ளதென்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) (i) புகையிரத பொதுமுகாமையாளரின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி குறுக்காக உள்ள பாதையில் பயணம் செய்கின்ற பயணிகளினதும் வாகனங்களினதும் பாதுகாப்பை அலட்சியப்படுத்துவதற்குக் கொள்கைத் தீர்மானம் எடுக்கப்பட்டது எப்பொழுது,

(ii) தீர்மானம் எடுப்பதில் கலந்து கொண்டவர்கள் யார்,

(iii) அத்தீர்மானத்தைப் பொதுமக்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

இ) இன்றேல், ஏன்?

0773/ '08

கௌரவ எம். டீ. நாமல் கருணாரத்ன,— சுற்றாடல், இயற்கைவளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) குருநாகல் மற்றும் மாத்தளை மாவட்டங்களின் எல்லையின் இருபுறத்திலும் "ஹல்மில்ல தெமட்ட" வன ஒதுக்குப்பிரதேசத்திற்குரிய மாத்தளை மாவட்டத்தில் 431/ஏ கொம்பாவ கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் மற்றும் குருநாகல் மாவட்டத்தின் 411 இமிஹாமினேகம கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் மாவட்ட எல்லைகளின் இரு புறத்திலும் அமைந்த வன ஒதுக்குப் பிரதேசத்தின் பகுதிகளை குறித்துக் காட்டுகையில் இமிஹாமினே கிராம உத்தீயொகத்தர் பிரிவில் தனியார் (சொந்த) காணிகள் கூட வன ஒதுக்குப் பிரதேசமாக உள்ளடக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் "ஹல்மில்ல தெமட்ட" வன ஒதுக்குப் பிரதேசத்தில் பிடி. காந்தி மீகொடபயன்படுத்தும் காணி, காணி ஒதுக்குப்பிரதேசத்தில் உள்ளடங்காவன்னம் குறிக்கப் பட்டுள்ளது என்பதையும்,

(ii) இமிஹாமினேகம புபுது கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு கிராமிய கைத்தொழில் மற்றும் சுயதொழில் ஊக்குவிப்பு அமைச்சினால் சுயகருத்திட்ட மொன்றுக்காக 1048004/= ரூபாய் பணம் கிடைத்திருந்த போதிலும் அதற்காக ஹல்மில்ல தொமட்ட எல கால்வாய்க்கருகிலுள்ள காணிக்கு செல்வதற்கு சிரேஷ்ட பிரதி வன பாதுகாப்பாளரிடமிருந்து "வருடாந்த பலநோக்கு அனுமதிப்பத்திர" மொன்று பெற்றிருக்கும் நிலையிலும் மேற்கூறிய காணியைப் பயன்படுத்துபவர் அதற்கு இடையூறு ஏற்படுத்து கின்றார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்கூறிய பயன்படுத்துபவர் உட்பட அவரது உதவியாளர்களால் ஏற்படுத்தப்படும் இடையூறுகளை நீக்க அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) காணி ஒதுக்குப்பிரதேசத்தை குறிப்பிடுவதில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை நீக்கி மீண்டும் வன ஒதுக்குப் பிரதேசத்தை குறித்துக்காட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்,

(iii) வன ஒதுக்குப் பிரதேசத்தை அழித்து அதனை தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரும் வகையில் செயற்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0600/ '08

கௌரவ வை. எம். நவரத்ன பண்டா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் 2007 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட சிங்கள இலக்கிய தொகுப்பு 10, 11 ஆம் ஆண்டுகளுக்கான பரிந்துரைக்கப்பட்ட பாடப்புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த குடவிகம கவிஞரின் "வெஸ்ஸ" எனும் கவிதை வரிசையின் முதல் கவிதை அகற்றப்பட்டிருப்பது எக்காரணத்தினால் என்பதையும்,

(ii) அதே புத்தகத்தில் ஸ்ரீமான் அரிஸென் அஹுபுது அவர்களின் கவிதையொன்று மேற்கோள் காட்டப்பட்டுள்ள போதிலும் அதில் கவிஞரின் பெயர் குறிப்பிடப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி புத்தகத்தில் சில கவிதைகளின் பொருள் திரிவுபடுத்தப் பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(இ) (i) இத்தகைய பாடப்புத்தகங்களில் ஏற்பட்டுள்ள தவறுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) மேற்படி தவறுகளை பொறுப்பேற்க வேண்டியவர்கள் இனங்காணப் பட்டுள்ளார்களா என்பதையும்,

(iii) ஆமெனில், அவர்கள் யாரென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0863/ '08

கௌர பேமசிரி மானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) பாடசாலைக் கட்டமைப்புக்குள் கடற்றொழில் தொடர்பான பாடங்களை கற்கும் மாணவர்கள் இருப்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) பாடசாலைக் கட்டமைப்புக்குள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் கடற்றொழில் தொடர்பான பாடங்களை கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) அந்த பாடம் நடைமுறையிலிருக்கும் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2008 ஆம் ஆண்டில் கடற்றொழில் பாடம் தொடர்பாக சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் அச்சிடப்பட்ட பாடப்புத்தகங்கள் எவ்வளவு என்பதையும்,

(ii) அதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0866/ '08

கௌர பேமசிரி மானகே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கச்சத்தீவின் பரப்பளவு எவ்வளவு என்பதையும்,

(ii) அந்த தீவின் மொத்த சனத்தொகை எவ்வளவு என்பதையும்,

(iii) அங்குள்ள மீனவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவா இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இந்திய அரசுக்கு அந்த தீவின் மீது உரிமை இல்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) அந்த தீவு தொடர்பாக இந்திய அரசினால் இலங்கை மீது பிரயோகிக்கப்படும் அழுத்தங்கள் எவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0590/ '08

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) அநுராதபுரம் வைத்தியசாலைக்கு பின்புறமாக அமைந்துள்ள பொன்னாராயன் குளம் வாவியைச் சுற்றியுள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலப்பிரதேசத்தை ஒரசில பிரிவினர் அத்துமீறியும் பலவந்தமாகவும் கைப்பற்றியுள்ளனரென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறு அத்துமீறி கைப்பற்றப்பட்டுள்ள பகுதி ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் பணிகளுக்காக பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டிருந்த பகுதியொன்றா என்பதையும்,

(ii) இவ்வாறாக அத்துமீறி கைப்பற்றப்பட்டமைக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0604/ '08

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) தயட்ட கிருல 2008 கண்காட்சியில் மாகாண சபைக்குரிய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் கலந்து கொண்டனவா என்பதையும்,

(ii) மாகாண சபைகள் கலந்து கொண்டால் ஒவ்வொரு மாகாண சபையும் வெவ்வேறாக எத்தகைய கடமைகளில் ஈடுபட்டன என்பதையும்,

(iii) அந்தந்த மாகாண சபைகளினால் கண்காட்சி கூடங்கள் அல்லது கண்காட்சி உபகரணங்கள் வழங்கப்பட்டனவா என்பதையும்,

(iv) அவ்வாறெனின், ஒவ்வொரு மாகாண சபையும் வெவ்வேறாக எவ்வாறான கண்காட்சிகளை ஏற்பாடு செய்திருந்தன என்பதையும்,

(v) ஒவ்வொரு மாகாண சபையின் அமைச்சுக்களினால் அல்லது நிறுவனங்க ளினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த காட்சிகூடங்கள் மற்றும் செலவு செய்யப் பட்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(vi) அத்தொகை செலவு செய்யப்பட்ட நிறுவனங்கள் மற்றும் செலவுத் தலைப்பு க்கள் யாவை என்பதையும்,

(vii) அனைத்து மாகாண சபைகளிலும் அந்த கண்காட்சிக்காக செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0779/ '08

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) பத்தேகம, கினிமெல்லகஹவில் அமைந்துள்ள "சான்ட்லங்கா கன்பெக்ஷ னரிஸ்" உள்ளூர் தொழிற்சாலை என்ற வகையில் பெருந்தொகையானவர் களுக்கு தொழில் வழங்கி நடத்தப்படுகிறது என்பதையும் ,

(ii) முக்கலை மின்சாரம் இன்மையால் அத்தொழிற்சாலையின் கொள்ளளவை அதிகரிக்கமுடியாதுள்ளதென்பதையும்,

(iii) முக்கலை மினசாரம் பெற்றுத் தரும்படி இலங்கை மினசார சபையிடம் கோரியிருந்தாலும் சில மீற்றர் தூர வித்தியாசம் காரணமாக இற்றைவரை மினசாரம் வழங்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இதனால் புதிய மின்மாற்றி ஒன்றைப் பொருத்தி மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதென்பது சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு அறிவிக்கப் பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) (i) தற்பொழுது உற்பத்திச் செலவுகள் அதிகரித்துள்ளதன் காரணமாக அத்தகைய பெருந்தொகையான பணத்தை ஒரே நேரத்தில் முதலீடு செய்ய முடியாதென்பதையும்,

(ii) உள்ளூர் கைத்தொழிலை அபிவிருத்திச் செய்யும் மஹிந்த சிந்தனை வேலத்திட்டத்தின் கீழ் இத்தொழிற்சாலைக்கு மின்சார உப நிலையம் ஒன்றைப் பெற்றுக் கொடுத்தால் இன்னும் பெருந்தொகையானவர்களுக்குத் தொழில் பெற்றுக் கொடுக்கமுடியும் என்பதையும்

அவர் ஏற்றுக் காள்வாரா?

(ஈ) இந்த நிலைமையைக் கவனத்திற் கொண்டு உள்ளூர் கைத்தொழிலைப் பாதுகாக்கும், மேம்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் புதிய மின்சார உப நிலையம் ஒன்றை அமைப்பதற்குச் செலவாகும் பணத்தில் ஒரு பகுதியையாவது வழங்குவதற்குச் சாத்தியமுண்டா என்பதை ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2009, சனவரி 06, செவ்வாய்க்கிழமை)**

0234/ '08

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— இளைஞர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இளைஞர் அலுவல்கள் (அமைச்சரவை) அமைச்சருக்கு உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0236/ '08

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) தபால், தொலைத் தொடர்புகள் (அமைச்சரவை) அமைச்சருக்கு உத்தியோக பூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0267 / '08

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) நெசவுக் கைத்தொழில் அபிவிருத்தி (அமைச்சரவை அந்தஸ்தற்ற) அமைச்சருக்கு உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங் கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0269 / '08

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அரச இறைவரி, நிதி (அமைச்சரவை அந்தஸ்தற்ற) அமைச்சருக்கு உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங் கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0246 / '08

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— மீள்குடியமர்த்துகை, அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அனர்த்த நிவாரண சேவைகள் (அமைச்சரவை அந்தஸ்தற்ற) அமைச்சருக்கு உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங் கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0250/ '08

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) நெடுஞ்சாலைகள் (அமைச்சரவை அந்தஸ்தற்ற) அமைச்சருக்கு உத்தியோக பூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங் கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## 2009, சனவரி 07, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0494/ '08

கௌரவ விஜித ஹேரத்,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான எத்தனை வாகனங்கள் வெளித்தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டுள்ளன,

(ii) இவ்வாகனங்களின் ரகம், இலக்கம் மற்றும் விடுவிக்கப்பட்ட திகதி ஆகியவை யாவை,

(iii) எந்தெந்த நிறுவனங்களுக்கு அல்லது நபர்களுக்கு எவ்வடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ளது,

(iv) இணைக்கப்பட்டிருப்பின் அவர்களின் பெயர் மற்றும் பதவி ஆகியவை யாவை,

(v) இவ்வாகனங்களை விடுவிப்பதற்கு உரிய அனுமதி பெறப்பட்டிருந்ததா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான கட்டிடங்கள் வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் வெளித்தரப்பினருக்கு வழங்கப் பட்டுள்ளதா,

(ii) இக்கட்டிடங்களின் முகவரி மற்றும் அதற்கான வாடகை அல்லது குத்தகை அடிப்படை யாது,

(iii) வழங்கப்பட்டுள்ள நிறுவனங்கள் அல்லது நபர்களின் பெயர் மற்றும் முகவரி ஆகியவை யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0527/ '08

கௌரவ அனுர திஸாநாயக்க,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச் சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) "மிஹின் ஏயார்" விமானக் கம்பனிக்குச் சொந்தமான விமானங்கள், கொள்வனவு செய்யப்பட்ட விமானங்களா அல்லது குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட வையா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அவை கொள்வனவு செய்யப்பட்டவை என்றால் பின்பற்றப்பட்ட கொள்வனவு நடைமுறை யாதென்பதையும்

(ii) கொள்வனவு செய்யப்பட்ட விலை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட விமானங்கள் இருப்பின் எப்போது பெறப்பட்டதென்பதையும்,

(ii) அதற்காக கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டிருப்பின் அது எப்போதென்பதையும்,

(iii) அவ்வாறு பெறப்பட்ட விமானங்களுக்கான பணம் செலுத்தப்பட்ட அடிப்படை, செலுத்தப்பட்ட தொகை மற்றும் அதற்கான நிபந்தனைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஈ) (i) குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட விமானங்களுக்காக இற்றைவரை செலுத்தப்பட்ட தொகை மாதரீதியாக தனித்தனியாக எவ்வளவென் பதையும்,

(ii) நிலுவைத் தொகை இருப்பின், அது எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0605/ '08

கௌரவ ஆர்.பி.ஏ. ரணவீர பதிரண,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) தெயட்ட கிருல – 2008 கண்காட்சி மூலம் எவ்வளவு வருமாணம் மதிப்பிடப்பட்டது என்பதையும்,

(ii) இக் கண்காட்சி எந்த நிறுவனத்தில் எவ்வளவு நிலப்பரப்பில் நடத்தப்பட்டது என்பதையும்,

(iii) கண்காட்சியின் பொருட்டு அரச அல்லது தனியார் துறைக்கு வர்த்தகக் கூடங்கள் வழங்கப்பட்டனவா என்பதையும்,

(iv) அவ்வாறு வழங்கப்பட்டிருந்தால் இந்த வரத்தகக் கூடங்களுக்கான வர்த்தக அனுமதிப்பத்திரங்கள் விற்பனையின் மூலம் எவ்வளவு பணம் பெறப்பட்டு ள்ளது என்பதையும்,

(v) இக் கண்காட்சியை பார்வையிடுவதற்காக எத்தனை டிக்கெட்டுக்கள் அச்சிடப்பட்டன என்பதையும்,

(vi) அவற்றுள் எத்தனை விற்பனை செய்யப்பட்டன என்பதையும்,

(vii) டிக்கெட் விற்பனையின் மூலம் பெறப்பட்ட தொகை எந்த நடவடிக்கைக்காகப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டது என்பதையூம்;

(viii) ஈட்டிக்கொள்ளப்பட்ட தொகையில் எவ்வளவு பணம் இதற்காகப் பயன் படுத்தப்பட்டது என்தையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) இன்றேல், ஏன்?

0730/ '08

கௌரவ என். டி. என். பி. ஜயசிங்க,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) நுவரெலியா மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கமநல சேவைகள் நிலையங்களின் எண்ணிக்கை யாது,

(ii) ஒவ்வொரு கமநல சேவை நிலையத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ள நெல், மரக்கறி, மலர்கள், பழங்கள் மற்றும் ஏனையவற்றைப் பயிரிடும் விவசாயி களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற 'உரமானியம்' எந்தெந்த விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றது,

(ii) இதன்பொருட்டு ஆண்டுதோறும் வழங்கப்படுகின்ற பசளையின் அளவு மற்றும் அதற்காக செலவிடப்படும் பணத்தொகை யாது

என்பதை அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) (i) மரக்கறிச் செய்கையாளர்களுக்கு வழங்கப்படுகின்றதா,

(ii) மரக்கறிச் செய்கையாளர்களைப் பாதுகாக்க சம்பந்தப்பட்ட அமைச்சிடம் வழிமுறைகள் இருக்கின்றனவா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0884/'08

கௌரவ பேமசிறி மானகே,— வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் எவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த மூன்று வருடங்களுக்குள் உப்பு இறக்குமதி செய்யப்பட்டதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், அது எவ்வளவு என்பதையும்,

(iii) வெங்காயம் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது என்பதையும்,

(iv) அதற்காக செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) உப்பு இறக்குமதி செய்த நிறுவனங்களின் பெயர், முகவரி என்பவற்றையும் அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0889/ '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பற்றிய பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2004 ஆம் ஆண்டு 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி பேரழிவின் விளைவாக தமது வீடுகளை இழந்த குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் அழிவுக்குள்ளாகிய வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) அரசாங்கத்தின் தலையீட்டினால் இற்றைவரை நிரந்தர வீடொன்றை பெற்றுக்கொண்டுள்ள அல்லது நிரந்தர வீடொன்றை பெற்றுக்கொள்வதற்கு நட்டஈடு பெற்றுக்கொண்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்?

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) நேரடியான அரச தலையீடு இல்லாமல் பல்வேறு அமைப்புகளினதும் நபர்களினதும் முயற்சிகளினால் நிரந்தர வீடுகளை பெற்றுக்கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவ்வாறு, நிரந்தர வீடொன்றை பெற்றுக்கொள்ளுதல் தொடர்பான பிரச்சினையை தீர்த்துக் கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) சுனாமி பேரழிவு காரணமாக வீடுகளை இழந்த, ஆயினும், இற்றைவரை நிரந்தர வீடுகள் கிடைக்காதுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iv) சுனாமியின் நிமித்தமாக வீடுகளை இழந்தநிலையில் தற்காலிக குடியிருப்புகளில் தங்கியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை மாவட்ட அடிப்படையில் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0890/ '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பற்றிய பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2004 டிசெம்பர் 26 ஆம் தேதியளவில் இலங்கை அரசாங்கம் வெளிநாடுகளுக்கு செலுத்தவேண்டியிருந்த கடன் தொகை எவ்வளவவென்பதையும்,

(ii) சுனாமியின் விளைவாக இலங்கை அரசுக்கு இற்றைவரை நிதி ரீதியாகக் கிடைத்த உதவித் தொகை (கடன் அல்லாத) எவ்வளவென்பதையும்,

(iii) செலுத்தப் படவேண்டியிருந்த கடன் தொகைகளில் சம்பந்தப்பட்ட நாடுகளின் இணக்கத்துடன் செலுத்தாமல் பதிவழிக்கப்பட்ட வெளிநாட்டு கடன் தொகை எவ்வளவென்பதையும்,

(iv) இதற்கேற்ப, 2004 டிசெம்பர் 26 ஆம் திததி நிகழ்ந்த சுனாமி பேரழிவையடுத்து ஏற்கனவே செலுத்தவேண்டியிருந்த கடன் தொகையிலிருந்து விலக்களிக்கப்பட்ட கடன் தொகை எவ்வளவென் பதையும்

அவர் இச்சபைக்குக் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சுனாமி பேரழிவு ஏற்பட்டதன் விளைவாக இலங்கை அரசுக்கு நிதி ரீதியிலான உதவிகளை (கடன் அல்லாத) வழங்கிய வெளிநாட்டு அமைப்புகள் மற்றும் நாடுகள் யாவையென்பதையும்,

(ii) வழங்கிய பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(iii) சுனாமி நிமித்தமாக அரசு செலுத்தவேண்டியிருந்த கடன் தொகையை பதிவழித்த அமைப்புகள் அல்லது நாடுகள் யாவையென்பதையும்

அவர் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0891/ '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நகர அபிவிருத்தி, புனித பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2008 சார்க் மாநாட்டிற்கு அண்மித்த காலப்பகுதியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருந்ததன் காரணமாக அல்லது பாதுகாப்பு காரணங்களுக்காக கொழும்பு மாவட்டத்தில் தகர்த்து அகற்றப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதெயும்,

(ii) அவை எவ்விடங்களிலிருந்து அகற்றப்பட்டன என்பதையும்,

(iii) இதனால் குடியிருப்புகளை இழந்த குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்ப தையும்

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தகர்த்து அகற்றப்பட்டதன் விளைவாக வீடுகளை இழந்த எத்தனை குடும்பங்களுக்கு அரச தலையீட்டுடன் நிரந்தர வீடுகள் வழங்கப்பட்ட தென்பதையும்,

(ii) எத்தனை குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள் வழங்கப்பட்டன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0914/ '08

கௌரவ பேமசிறி மானகே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தில் தற்போது கடைமையாற்றுகின்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் கடைமகளை நிறைவேற்றுதற்குத் தேவையான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்,

(ii) குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திற்கான கடைமை நடவடிக்கைகளின் பொருட்டு தற்போதுள்ள உத்தியோகத்தர்கள் எண்ணிக்கை போதுமானதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) 1980,1990,1995,2000 மற்றும் 2007 ஆகிய ஆண்டுகளில் இந்த நாட்டுக்கு வருகை தந்த நபர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0558/ '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கடந்த 20 வருடங்களில் இலங்கை அரசாங்கத்திற்கு கடன் வழங்கிய நாடுகள், சர்வதேச நிறுவனங்கள் அல்லது வங்கிகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றின் பெயர்களை வருடாந்த அடிப்படையிலும்,

(ii) மேற்படி வினா (i) இன் பிரகாரம், இன்று வரை செலுத்த வேண்டியுள்ள மொத்தக் கடன்தொகை எவ்வளவு என்பதையும்,

(iii) மேற்படி வினா (i) இன் பிரகாரம் 1999 ஆம் ஆண்டு இறுதியிலிருந்த மொத்தம் எவ்வளவு என்பதையும்,

(iv) 1999 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை நாடுகள் அல்லது நிறுவனங்களால் வழங்கப்பட்ட தொகையையும்,

(v) இதற்கான வட்டி வீதம் மற்றும் வழங்கப்பட்ட காலப்பகுதி எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2000 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை திருப்பிச் செலுத்த வேண்டிய மொத்தக் கடன் தொகையை (முதல் மற்றும் செலுத்த வேண்டியெ வட்டி உள்ளடங்களாக) இன்றுவரை பெற்றுக்கொள்ளப்பட்ட கடனையும் சேர்த்து எவ்வளவு என்பதை வருடாந்த அடிப்படையிலும்,

(ii) மேற்படி தகவல்களை ஐக்கிய அமெரிக்க டொலரிலும், விஷேட மீளப்பெறல் உரிமைகளிலும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2009, சனவரி 08, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0521/ '08

கௌரவ அநுர திசாநாயக்க,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) மொரகஹகந்த நீர்த் தேக்கத்தை நிர்மாணிக்கும் கருத்திட்டத்தின் பொருட்டு மதிப்பிடப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு,

(ii) 2007 ஆம் ஆண்டுக்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது,

(iii) மேற்படி, கருத்திட்டத்தின் பொருட்டு வெளிநாட்டுக் கடன்கள் அல்லது மானியங்கள் வழங்கப்படுகின்றதா,

(iv) மேற்படி, கருத்திட்டம் எத்தனை ஆண்டுகளில் பூர்த்திசெய்யப்பட உத்தேசிக் கப்பட்டுள்ளது,

(v) ஒவ்வொரு ஆண்டுக்காகவும் ஒதுக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற பணத் தொகை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி, கருத்திட்டத்தின் காரணமாக இடம்பெயர நேரிடுகின்ற குடும்பங் களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) அவர்களுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள காணிகள் அமைந்துள்ள பிர தேசங்கள் யாவை மற்றும் ஒரு குடும்பத்துக்கு வழங்கப்படும் காணியின் அளவு எவ்வளவு,

(iii) காணிகளுக்கு மேலதிகமாக இடம்பெயர்ந்தோருக்கு வழங்கப்படுகின்ற ஏனைய வசதிகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி, கருத்திட்டத்தின் பொருட்டு சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை யொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா,

(ii) ஆமெனில், அது எப்போது,

(iii) அதன் பிரகாரம் விதப்புரைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) (i) மேற்படி, கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான விழாவுக்காகச் செலவிடப் பட்ட மொத்தத் தொகை எவ்வளவு,

(ii) இதில் விளம்பரப் பணிகளின் பொருட்டு பொறுப்பாயிருந்த கம்பனி யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) தொலைக்காட்சி அறிவித்தல்கள், சுவரொட்டிகள் , பத்திரிகை அறிவித்தல்கள், விளம்பரப் பலகைகள் மற்றும் ஏனைய விளம்பரப் பணிகளின் பொருட்டு குறித்த கம்பனிக்குச் செலுத்தப்பட்ட தொகை தனித்தனியாக எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

0609/ '08

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2000 ஆம் ஆண்டு மே மாதமாகும்போது அரச வங்கிகளில் நிலவிய வட்டி வீதங்கள் யாவையென்பதையும்,

(ii) 2003 சனவரி மாதமாகும்போது நிலவிய வட்டி வீதங்கள் யாவை யென்பதையும்,

(iii) 2005 ஆம் ஆண்டு மே மாதமாகும்போது அரச வங்கிகளில் நிலவிய வட்டி வீதம் யாதென்பதையும்,

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் யாதென்பதையும்,

(ii) 2004 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் யாதென்பதையும்,

(iii) 2004 ஆம் ஆண்டு புதிய அரசாங்கம் ஆட்சி பீடம் ஏறியதையடுத்து, இற்றைவரை வட்டி வீதம் அதிகரித்து செல்வதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0127/ '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 1979 ஆம் ஆண்டின் 63 ஆம் இலக்க உள்ளூராட்சி வீடமைப்பு (திருத்த) சட்டத்தின் கீழ் மேல் மாகாணத்தில் உள்ள வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) பிரதேச அடிப்படையில் வீடமைப்புத் திட்டங்களின் எண்ணிக்கை வெவ் வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 20 வருடங்களுக்கும் மேலாக வாடகை அடிப்படையில் உள்ள வீடுகள் அந்தந்த உள்ளூராட்சி நிறுவனங்களினால் உடமை உரிமை மாற்றல் பத்திர மொன்றின் மூலம் அறவீடு இன்றி வழங்கப்படுமா என்பதையும்,

(ii) அதற்கு தடை ஏதேனும் இருப்பின் அது என்ன என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0614/ '08

கௌரவ வை.எம். நவரத்ன பண்டா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2007 திசெம்பர் மாதம் நடத்தப்பட்ட கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதர க.பொ.த. (சா.த.) பரீட்டைசைக்குத் தோற்றிய மாணவர்களில் ஒரு மாணவனேனும் சித்தியடையாத பாடசாலைகள் உள்ளனவா என்பதையும்,

(ii) ஆமெனில், அப் பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்,

(iii) ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலைகளில் கல்விப் பொதுத் தராதரப்பத்திர ( சாதாரண தர) பரீட்சைக்குரிய பாடங்களைக் கற்பிப்பதற்குத் தேவையான ஆசிரியர்கள் இருந்தனரா என்பதையும்,

(ii) இருக்கவில்லையெனில், அது எப்பாடங்களுக்கு என்பதையும்

அவர் குறிப்படுவாரா ?

(இ) இன்றேல், ஏன்?

0916 / '08

கௌரவ பேமசிறி மானகே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) கணக்காய்வாளர் அதிபதி திணைக்களத்தின் கீழ் கணக்காய்வுப் பணிகளுக்காக தேவைப்படும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபையில் தெரிவிப்பாரா ?

(ஆ) கணக்காய்வாளர் அதிபதி திணைக்களத்தில் தற்போது கடமையில் ஈடுபட்டுள்ள உதவி கணக்காய்வாளர் அதிபதி, கணக்காய்வு அத்தியட்சகர் மற்றும் கணக்காய்வு பரீட்சகர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(இ) (i) மேற் குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான வெற்றிடங்கள் உள்ளனவா என்பதையும்,

(ii) ஆமெனில், அது எவ்வளnவென்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா ?

(ஈ) இன்றேல், ஏன்?

0435 / '08

கௌரவ பேமசிறி மானகே,— ஏற்றுமதி அபிவிருத்தி, சர்வதேச வர்த்தக அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2006 ஆம் ஆண்டில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட மரக்கறி, பழங்கள், தானியங்கள் மற்றும் பலசரக்குகளின் தொகைகளையும் அவற்றின் உப பிரிவுகளின் தொகைகளையும்,

(ii) இதற்கென செலவிடப்பட்ட தொகை மற்றும் ஈட்டப்பட்ட வருமானத்தை அமெரிக்க டொலர் மற்றும் ரூபாய்களில் வெவ்வேறாகவும்,

(iii) இது தொடர்பாக நடவடிக்கை எடுத்த ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதி யாளர்கள் யாவர் என்பதையும்,

(iv) இவர்களுடைய நிறுவனங்களின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்கள் ஆகியவற்றையும்

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட உணவு வகைகளை உள்நாட்டில் உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களின் பெயர், உரிய நிறுவனம், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் ஆகியன யாவை,

(ii) இவ்வுணவு வகைகளை உள்நாட்டில் உற்பத்தி செய்து வெளிநாட்டு செலாவணியை சேமிக்க அரசுக்கு முறைப்படியானதொரு வேலைத்திட்டம் உள்ளதா,

(iii) அவ்வாறாயின், அது யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0612/ '08

கௌரவ, பேமசிறி மானகே,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) தென் மாகாண மாகாண சபையின் மாகாண சபை உறுப்பினர்களுக்கு 2007, 2008 ஆம் ஆண்டுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி தென் மாகாண மாகாண சபையின் உறுப்பினர்கள் வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டுள்ளார்களா என்பதையும்.

(iv) ஆமெனில், வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்டவாறு, வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்ட உறுப்பினர்களின் பெயர்கள் மற்றும் இவர்கள் சார்ந்துள்ள அரசியல் கட்சிகள் யாவையென்பதையும்,

(ii) விஜயம் செய்த நாடுகள் மற்றும் அதற்கான செலவினம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0172/ '08

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரு மானவரைக் கேட்பதற்கு,—

(அ) அரச அனுசரணையுடன் அநுராதபுர மாவட்டத்தில், மாத்தளைச் சந்தி, குருந்தன்குலமவில் வரையறுக்கப்பட்ட ஜனதா லங்கா மிளகாய் கம்பனி எனும் பெயரில் ஒரு கம்பனி தாபிக்கப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், அக்கம்பனியின் தலைவர் யார்,

(ii) ஒரு பணிப்பாளர் சபையும், ஒரு உத்தியோகத்தர் சபையும் நியமிக்கப் பட்டிருப்பின் அவர்களது பெயர் மற்றும் முகவரிகள் யாவை,

(iii) கம்பனி தாபிக்கப்படும் பொருட்டு வடமத்திய மாகாண சபையின் அல்லது அரசாங்கத்தின் பணம் அல்லது வளங்கள் பயன்படுத்தப்பட்டதா,

(iv) ஆமெனில், பணம் இடப்பட்ட நிறுவனம் மற்றும் பணத்தொகை யாது,

(v) வேறு வசதிகள் வழங்கப்பட்டிருப்பின், அவை யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இக்கம்பனியில் கமக்காரர்கள் அங்கத்தவர்களாகச் சேர்த்துக் கொள்ளப் பட்டார்களா,

(ii) ஆமெனில், அவர்களுடைய பெயர், முகவரிகள், அங்கத்துவப் பணம் அல்லது அவ்வாறு சேகரிக்கப்பட்டுள்ள பணத்தொகை யாது,

(iii) அங்கத்துவப்பணம் சேகரிக்கப்பட்டிருப்பின் அவை எந்த நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன,

(iv) அங்கத்துவப் பணத்தொகைகளை மீளச்செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) கைவிடப்பட்டிருந்த மேற்படி கம்பனி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதெனில், அது எப்போது,

(ii) இதன் பொருட்டு கமநெகும கருத்திட்டத்தின் மூலம் பணம் ஒதுக்கப் பட்டிருப்பின், குறித்த பணத்தொகை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0307/ ' 08

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கமநல சேவைகள் திணைக்களத்திற்கு இடைச்சேர்க்கப்பட்ட கமநல ஆராய்ச்சி மற்றும் உற்பத்தியாளர்களின் முதலாம் தரத்திற்குத் தேவையான தகைமைகள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி முதலாந்தரப் பதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக எவரேனும் சிலர் போலிக் கல்விச் சான்றிதழ்களை சமர்ப்பித்துள்ளார்களா என்பதையும்,

(iii) ஆமெனில், இவர்கள் யாரென்பதையும்,

(iv) இவ்வாறாக போலிச்சான்றிதழ்களைச் சமர்ப்பித்த எவரேனும் ஊழியர்கள் II ஆம் தரத்திற்கு நியமிக்கப்பட்டதன் மூலம் இவர்களுக்கு நிவாரணமளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(v) இவர்களின் பெயர்கள் மற்றும் அடிப்படைத் தகைமைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) இவ்விடயத்தின் போது அரச கொள்கைகளுக்கு இணங்கியொழுகாத வகையில் சிலரின் மனித உரிமைகள் மீறப்படும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) அடிப்படைத் தகைமைகளின்றி அநீதிக்குள்ளாகியுள்ளவர்களுக்கு II ஆம் தரத்தைப் பெற்றுத்தருவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0048/ '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) ஹோட்டல் டிவெலெப்பேர்ஸ் (லங்கா) லிமிட்டெட்டின் ஹில்ரன் ஹோட்டல் அமைந்துள்ள 7 ஏக்கர் நிலம், 1999, யூலை மாதம் விசேட மானியங்கள் இல 673 மற்றும் 674 என்பவற்றின் ஒப்படைப்பின் பிரகாரம் அரச உறுதியுரிமையில் உள்ளது என்பதையும்,

(ii) இந்நிலம் மீள அரச உறுதியுரிமைப்படுத்தப்பட்டது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) 1999, யூலை மாதம் தொடக்கம் எச்.டி.எல் இனால் இந்நிலத்தைப் பயன் படுத்தியமைக்காகச் செலுத்தப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) அவ்வாறு செலுத்தப்படவில்லையானால், அதேவிதமான சலுகை ஏனையோருக்கும் வழங்கப்படுமா என்பதையும்,

(iii) எச்.டி.எல் வங்குறோத்து அடைந்திருப்பதால், அதை முடிவுறுத்துவதற்கு விண்ணப்பமொன்று தாக்கல் செய்யப்பட்டிருக்கிறதா என்பதையும்,

(iv) 2007, மே 03 ஆம் திகதிக்குப் பின்னர் எச்.டி.எல் இனை மூடிவிடுவதற்கு அமைச்சரவை எதிர்ப்புத் தெரிவித்துள்ளதா என்பதையும்,

(v) அவ்வாறாயின், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கக் கம்பனிச் சட்டத்திற்கமைய, அரச கடன்களின் மீதான குறையும் இடைவெளித் தொகையை அரசிற்குச் செலுத்துதற்கான தனிப்பட்ட பொறுப்பை அமைச்சரவை ஏற்குமா என்பதையும்,

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0057/ '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கடந்த மூன்று வருடங்களில் கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுப் பயணங்களின் எண்ணிக் கையையும்

(ii) விஜயம் செய்த நாடுகளையும், மற்றும்

(iii) பயணச் சீட்டுக்கள் மற்றும் ஹோட்டல் கட்டணங்கள் என்பவற்றின் செலவு களுடன் ஒவ்வொரு பயணத்திற்குமான மொத்தச்செலவை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உடன்சென்ற நபர்களின் எண்ணிக்கையையும்,

(ii) அவர்களின் பெயர்கள் மற்றும் அவர்களுக்கென ஏற்பட்ட செலவுகள் என்பவற்றை வெவ்வேறாகவும், அத்துடன்

(iii) ஒவ்வொரு வெளிநாட்டுப் பயணத்திற்குமான பிரதான காரணத்தையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) அப்பயணங்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை, மற்றும்

(ii) அப் பயணங்களுக்கென வழங்கப்பட்ட குறை நிரப்புச் செலவினம் என்பவற்றையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0617/ '08

கௌரவ விஜித ஹேரத்,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அரச சேவைக்குரிய இலங்கை திட்டமிடல் சேவையில் தற்போது உள்ளதான பதவிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்,

(ii) அப்பதவிகளில் தற்போதுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்,

(iii) மேற்படி வெற்றிடங்களுள் II/II ஆம் தரத்திற்கான வெற்றிடங்களை நிரப்புவ தற்காக இலங்கை திட்டமிடல் சேவைக்கான ஆட்சேர்ப்பு திறந்த மற்றும் வரையறுக்கப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் மேற் கொள்ளப்படுமா என்பதையும்,

(iv) இவ்வாறு சேர்த்துக்கொள்ளப்படும் எண்ணிக்கை எத்தனை என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) ஆமெனில், அவ்வாறு ஆட்சேர்ப்பு செய்யப்படும் திகதி மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறை என்னவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0618/ '08

கௌரவ விஜித ஹேரத்,— தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2006 ஆம் ஆண்டு பிரதேச திட்டமிடல் பற்றிய பட்டப்பின் படிப்பு திப்புளோமா பாடநெறியைப் பயின்ற தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சைச் சேர்ந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு பாடநெறியைப் பயிலும் பொருட்டு நிதி ஒதுக்கீடு கோரப்பட்டிருந்தும் அப்பணம் எக்காரணத்தினால் வழங்கப்படாமலுள்ளது என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி அமைச்சிலும் பிற அமைச்சுக்களிலும் இப்பாடநெறியைப் பயின்ற சில உத்தியோகத்தர்களுக்கு மட்டும் மேற்படி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டதன் அடிப்படை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) தாம் விரும்புகின்ற உத்தியோகத்தர்களுக்கு மட்டும் பணம் வழங்கும் அடிப்படையை மாற்றியமைத்து மேற்படி அமைச்சில் பணிபுரிகின்ற உரிய உத்தியோகத்தர்களுக்கும் குறித்த ஒதுக்கீடுகளை வழங்குவாரா என்பதையும்,

(ii) ஆமெனில், அது எப்போது என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## 2009, சனவரி 09, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

0301/ '08

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கை மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமான வெஹெரகலப் பிரிவில் றுஹுணுகம அலகில் 125 ஆம் இலக்க காணியில் சுமார் 10 வருடகாலமாக எல். கே. நிமல் என்பவர் இரண்டு மாடிக்கட்டிடமொன்றை அமைத்து நிரந்தரமாகக் குடியிருக்கின்றாரென்பதையும்,

(ii) இக்கட்டிடத்துக்கு மின்சாரம் பெறுவதற்காக வெஹெரகலப் பிரிவு முகாமையாளரினால் உரிமை உறுதிப்படுத்தப்பட்ட கடிதமொன்று மின்சார சபைக்கு வழங்கப்பட்டுள்ளதென்பதையும்,

(iii) இவர்களின் பெயர்கள் வாக்காளர் பெயர்ப்பட்டியலில் காணப்படுகின்ற தென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இக்காணியையும் இக்கட்டிடத்தையும் மகாவலி அதிகாரசபைக்குச் சுவீகரித்துக் கொள்வதற்காக பொலன்னறுவை நீதவான் நீதிமன்றத்தில் 44149/06 ஆம் இலக்க வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை வெறும் அரசியல் பழிவாங்கலாகும் என்பதையும்,

(ii) 2004 ஆம் ஆண்டுத் தேர்தலின்போது மகாவலி பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இவரின் வீட்டுக்கு துப்பாக்கி வேட்டுக்களைத்தீர்த்துவிட்டு ஓடினார்கள் என்பதையும்,

(iii) இது தொடர்பாக அரலகன்வில பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள தென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இவரின் காணியைச் சுற்றியுள்ள ஏனைய அனைத்து காணிகளும் ஆரம்பத்தில் காணி பெற்றோரிடமிருந்து பெற்றுக்கொண்டு அனுபவிக்கப்பட்டு வருகின்ற வையாக உள்ளதுடன் அக்காணிகள் தொடர்பாக இவ்வாறான நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதது ஏனென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) திரு. நிமலுக்கு மேலும் இவரின் வீட்டையும் காணியையும் அனுபவிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் குறிப்பிடு வாரா?

(உ) இன்றேல், ஏன்?

0304 / '08

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இலங்கை மகாவலி அதிகார சபையின் விக்டோரியா வலயத்தைச் சேர்ந்த அம்பகொட்டேவத்த மாற்றுக்காணி அடிப்படையில் காணி பெற்றுள்ளவர்கள் வருடாந்தம் வரி செலுத்த வேண்டுமென கட்டளையிடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 1983 ஆம் ஆண்டு வரை அம்பகொட்டேவத்தையில் தோட்டத் தொழிலாளர்களாக வேலை செய்த இவர்களுக்கு விக்டோரியா நீர்த் தேக்கத்தில் மூழ்கிய காணிகளில் வசித்தவர்கள் என்ற வகையில் குறிப்பிட்ட தோட்டத்தில் காணி வழங்கிய காரணத்தினால் தொழிலை இழந்துவிட்டன ரென்பதையும்,

(ii) அவர்களது மாட்டுப்பட்டி மற்றும் கோழி வளர்ப்பு போன்ற மேலதிக வருமானங்கள் தடைப்பட்டதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மகாவலி காணிகளுக்கு வரி விதிப்பதை நிறுத்தி நிவாரணம் அளிக்க அவர் நடவடிக்கையெடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0347/ '08

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2004 ஆம் ஆண்டு புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் பிரதி அமைச்சர் இற்றைவரை விஜயம் செய்த வெளிநாடுகள் யாவை யென்பதையும்,

(ii) பிரதி அமைச்சர் மேற்கொண்டுள்ள உத்தியோகபூர்வ மற்றும் தனிப்பட்ட வெளிநாட்டு விஜயங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி விஜயங்களின் போது அவருடன் கலந்துகொண்ட உத்தி யோகத்தர்களின் பெயர் மற்றும் பதவி ஆகிய விபரங்களையும்,

(ii) பிரதி அமைச்சரின் தனிப்பட்ட பணியாட்டொகுதி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டார்களாயின் அவர்களின் பெயர் மற்றும் பதவி ஆகிய விபரங்களையும்,

(iii) அவர் உள்ளிட்ட ஏனைய உத்தியோகத்தர்கள் பயணம் செய்த விமானக் கம்பனி மற்றும் வகுப்பு யாதென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(இ) மேற்படி விஜயங்களினால் இந்நாட்டிற்கு கிடைத்த வெளிநாட்டு உதவி, வெளி நாட்டுக் கடன், கருத்திட்டம் அல்லது வேறு அனுகூலங்கள் யாவையென்பதை ஒவ்வொரு விஜயத்திற்கும் உரியவாறு வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0512 / '08

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத, மின்கலத்தின் விசையை கொண்டு இயங்கும் மோட்டார் வாகனங்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி வாகனங்கள் எந்நாடுகளிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப் படுகின்றதென்றும் அவற்றின் உள்நாட்டு முகவர்கள் யாவரென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இலங்கையில் வாகனங்களினால் ஏற்படும் சூழல் மாசடைதலைத் தடுத்து நிறுத்த மின் கலத்தைக் கொண்டு இயங்கக்கூடிய வாகனங்கள் பொருத்தமானதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) (i) சுற்றாடல் நேயமிக்க மேற்படி மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்யும் போது இறக்குமதித் தீர்வை சலுகைகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்வாரா,

(ii) இவ்வாறான வாகனங்களை இலங்கையில் பொருத்துவதற்கான தொழிற் சாலைகளை நிறுவுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுமா என்பதை

அவர் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0625/ '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— சுற்றாடல், இயற்கைவளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) மஹரகம நகரசபை எல்லையில் அமைந்துள்ள பொரலஸ்கமுவ வாவியின் நீர் அசுத்தமடைந்துள்ளமை தொடர்பாக விவசாய சங்கங்கள் உட்பட, பொது மக்கள், பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களுக்கு முறைப்பாடு செய்துள்ளார்கள் என்பதையும்,

(ii) பிரதிப் பணிப்பாளரின் (கழிவுப் பொருள் முகாமைத்துவம்) 07/09/என். டபிள்யூ. எம். /11/2008 ஆம் இலக்கமும் 2008.03.25 ஆம் திகதியும் கொண்ட கடிதத்தின் மூலம் நீர் அசுத்தமாகியுள்ளமை நிரூபிக்கப்பட்டுள்ளது என்பதை

அவர் அறிவாரா?

(ஆ) கொழும்பு நீர்ப்பாசன பொறியியலாளரினால் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தின் மூலம் நீர் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையொன்றும் அது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் கேட்கப்பட்டுள்ளது என்பதையும் அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) வாவியின் நீர் அசுத்தமடைவதற்கான காரணம் என்ன என்பதையும்,

(ii) அதற்குப் பொறுப்பானவர்கள் யார் என்பதையும்,

(iii) சூழல் மாசடைவதை தடுப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0666 / ' 08

கௌரவ சமன்சிறி ஹேரத்,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) பள்ளம பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள கொலஎலிய வாவிக்கும் வாவியின் ஒதுக்குப் பிரதேசத்திற்கும் சொந்தமான முழுக்காணியின் பரப்பளவு எவ்வளவென்பதையும்,

(ii) இதன் மூலம் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்படுகின்ற வயற்காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 1984 ஆம் ஆண்டில் கொலஎலிய வாவி புனரமைப்பதற்கு முன்னர் வாவிக்குள் மூழ்குவதாக இனங்காணப்பட்ட சதுப்பு நிலங்களின் பரப்பளவு எவ்வளவென்பதையும்,

(ii) இந்நிலங்களின் உரிமையாளர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) மேற்படி உரிமையாளர்களுக்கு வாவியின் புனரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் சட்டரீதியாக மாற்றுக் காணிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஈ) அவ்வாறு மாற்றுக் காணிகளைப் பெற்றுக்கொண்டவர்களின் பெயர்ப் பட்டியலையும், வழங்கப்பட்ட முழுக்காணியின் பரப்பளவையும், வழங்கப்பட்ட திகதியையும், இவ்விடயத்தில் ஈடுபட்ட நிறுவன உத்தியோகத்தர்களின் பெயர் களையும், வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(உ) மாற்றுக் காணிகள் வழங்கப்பட்டதன் பின்னரும் சதுப்பு நிலங்களுக்கு உரித்துடைய சிலரை அந்நிலங்களிலிருந்து அகற்றுவதற்கு இற்றைவரை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லையென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஊ) (i) மாற்றுக்காணிகள் வழங்கப்பட்டிருந்தும் இவர்களை வெளியேற்றாமல் இருப்பதற்கான காரணம் யாதென்பதையும்,

(ii) இக்காணிகளில் சட்டவிரோதமாக நிர்மாணப் பணிகளும், மின்கம்பி பொருத்துதலும் எவ்வாறு நிகழ்ந்ததென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(எ) இன்றேல், ஏன்?

0695/ '08

கௌரவ எம். டீ. நாமல் கருணாரத்ன,— சுற்றாடல், இயற்கைவளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) குருநாகல், அநுராதபுரம் மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் கஹல்ல பல்லேகலே வணவிலங்குகள் சரணாயத்தின் சூழல் எவ்வாறு பெறுமதி வாய்ந்தது எனபதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்த சரணாலயத்தின் எல்லையில் உள்ள பிரதேச செயலக பிரிவுகளில் யானைகளுக்கும் — மனிதர்களுக்குமிடையிலான மோதல் தீவிரமடைந் திருப்பதனால் உயிரிழந்த மனிதர்களின் எண்ணிக்கை மற்றும் யானைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) யானைகள் மற்றும் மனிதர்களுக்கிடையிலான இந்த மோதலை குறைப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன என்பதையும்,

(iii) யானைகள் மற்றும் மனிதர்களுக்கிடையிலான மோதலை குறைக்கும் நோக்குடன் நிர்மாணிக்கப்பட்ட மின்சார வேலியின் கதிர்வீச்சின் அளவு போதுமானதா என்பதையும்,

(iv) குறிப்பிட்ட மின்சார வேலியின் கதிர்வீச்சின் அளவு போதுமானதல்ல என்றால் பிரதான மின் இணைப்பில் இருந்து மின்சாரம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தற்போதுள்ள மின்சார வேலியின் பொல்பித்திகம பிரதேச செயலக பிரிவில் அடங்கும் பகுதியை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், அது எந்தளவுக்கு என்பதையும்,

(iii) அவ்வாறு விஸ்தரிக்கப்படும் போது சரணாலயத்துக்குள் அடங்கும் வீடுகள் மற்றும் வீட்டுத்தோட்டங்களுக்காக இழப்பீடுகள் மற்றும் மாற்று காணிகள் வழங்கப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0697/ '08

கௌரவ எம். டீ. நாமல் கருணாரத்ன,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) எல்லைக்கோட்டு முறையின் கீழ் அரச காணிகள் 30 வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குதல் நிறுத்தப்பட்டுள்ளதா,

(ii) ஆமெனில், அதற்கான காரணம் யாது,

(iii) அவ்வாறான காணிகள் சுதந்திரக் கொடுப்பனவுப் பத்திரத்தின் மூலம் வழங்கப்பட்டிருப்பின் அது அனைத்து எல்லைக்கோட்டுக் காணிகளுக்கும் செல்லுபடியாகுமா,

(iv) தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு மாத்திரம் சுதந்திரக் கொடுப்பனவுப் பத்திரம் வழங்க முடியுமா,

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பொல்பித்திகம பிரதேச செயலாளர் பிரிவில் எல்லைக்கோட்டு முறையின் கீழ் காணிகள் வழங்கப்பட்டுள்ள அல்லது அதற்காகப் பிரேரிக்கப் பட்டுள்ளவர்களின் பெயர், முகவரி, காணியின் அளவு மற்றும் அவற்றின் மூலம் கடந்த 5 வருடங்களில் கிடைத்த குத்தகை வருமானம் தனித்தனியாக யாது,

(ii) மேற்படி காணிகளின் அபிவிருத்தி செய்யப்பட்ட /அபிவிருத்தி செய்யப்படாத மற்றும் பராமரிப்பு நிலைமைகள் யாவை,

(iii) எல்லைக்கோட்டுக் குத்தகைக் காணிகளிலிருந்து பெறப்படும் வருடாந்த வருமானம் இற்றைப்படுத்தப்பட்டுள்ளதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) களுகல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவில் எம்.எல். 81 மற்றும் 88 உத்தரவுப் பத்திரங்களின் மூலம் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள காணிகளின் பரப்பளவு எவ்வளவு,

(ii) அவை தொடர்ந்தும் செல்லுபடியாகுமா,

(iii) வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்படாது பிரத்தியேக வேண்டுகோளின் அடிப்படையில் மேற்படி காணிகள் வழங்கப்படுவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதா,

(iv) மேற்படி காணிகளை சுதந்திரக் கொடுப்பனவுப் பத்திரத்தின் மூலம் எஸ். கே. டபிள்யூ. கருணாரத்ன மற்றும் எஸ். ஏ. யூ. ராஜபக்ஷ ஆகியோருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

(v) மேற்படி பிரிவில் ஏனைய காணிகளின் பொருட்டும் சுதந்திரக் கொடுப்பனவுப் பத்திரத்திற்கு விண்ணப்பிக்க முடியமா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0701/'08

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கா/நாகொட பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான இஹல ஹோமதொல மூகலான எனும் காணி கன்னலிய ஒதுக்கத்துக்கு அடுத்ததாக அமைந்துள்ளதென்பதையும்,

(ii) காடு பேணல் திணைக்களத்துக்கு இக்காணியை ஒப்படைப்பதற்கான 04/0858/001/005—111ஆம்இலக்க அமைச்சரவைத் தீர்மானம் மேற்கொள்ளப் பட்டது. இக்காணியும் ஒதுக்கமாக வைக்கப்பட வேண்டிய ஓர் அடர்ந்த வனமாக இருப்பதனாலாகும் என்பதையும்

அவர் அறிவாரா ?

(ஆ) (i) 2002—2004 காலத்தில் இருந்த அரசின் அமைச்சரொருவரின் இணைப்புச் செயலாளருக்கு ஹோமதொல மூகலான காணியில் 50 ஏக்கரை வழங்குவதற்கு 2003 ஆம் ஆண்டில் நில அளவை செய்யப்பட்ட தென்பதையும்,

(ii) இவ்வாறு அளவை செய்யப்பட்ட இக்காணியில் 2000 க்கு மேற்பட்ட பலவித மரங்கள் இருந்ததற்கான அறிக்கை உரிய கோவையிலுள்ளதோடு காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் அப்போதைய காலி மாவட்டப் பணிப்பாளர் அடங்கலான உத்தியோகத்தர்களின் எதிர்ப்பின் காரணமாக இது நிறுத்தப்பட்டது என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) இவ்வாறிருக்கையில், ஒதுக்கமாக இருக்கவேண்டிய இக்காணியிலிருந்து 50 ஏக்கர், காடு பேணல் திணைக்களத்தின் அல்லது சுற்றாடல் மற்றும் இயற்கை வள அமைச்சரின் அனுமதியின்றி வழங்கப்பட்டுள்ளதனால் இதை நிறுத்த அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0716/ ' 08

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) நாட்டில் வாழ்க்கைச் செலவு மக்களால் சுமக்க முடியாத அளவுக்கு அதிகரித்துள்ளது என்பதையும்,

(ii) மேல் மாகாணத்தில் மாத்திரம் நடைமுறையிலிருக்குமாறு விஷேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் பண்டங்கள் மற்றும் சேவைகள் மீது 0.5% வீத மொத்த விற்பனை வரி விதிக்கப்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வரி விதிக்கப்பட்ட பண்டங்கள் அவை விதிக்கப்பட்டுள்ள முறைகள் யாவை என்பதையும்,

(ii) இதன் மூலம் சம்பாதிக்க எதிர்பார்த்துள்ள வரி வருமானம் எவ்வளவு என்பதையும்,

(iii) ஏனைய மாகாண சபைகளில் இந்த வரி முறை நடைமுறையில் இல்லாத பட்சத்தில் மேல் மாகாணத்தில் மாத்திரம் இந்த பண்டங்கள் மற்றும் சேவைகளின் விலைகள் அதிகரிக்கமாட்டாதா என்பதையும்,

(iv) நாட்டில் ஒரு பொருளுக்கு பலதரப்பட்ட விலைகள் இருப்பதனால் அந்த மாகாணத்திற்குள் செயற்பாடுகள் எவ்வாறு இருக்கும் என்பதையும்,

(v) இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட வரி வருமானத்தை பெறமுடியுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) நாட்டில் இருக்கும் அனைத்து மாகாண சபைகளிலும் இந்த வரியை விதிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0717/ ' 08

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இலங்கையின் பெறுமதிமிக்க வளங்களிலொன்றான யானைகள் ஏற்கனவே பாரிய அளவில் அழிவடைந்து வருகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இயற்கையல்லாத காரணங்களினால் 1990 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரை ஏறத்தாழ 2200 யானைகள் இறந்துள்ளமை தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா,

(ii) இவ்விதமாக யானைகள் இறப்பதைத் தடுப்பதற்காக இற்றைவரை அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை,

(iii) யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான மோதல் காரணமாக இற்றைவரை அழிவடைந்துள்ள மனித உயிர்களின் எண்ணிக்கை யாது,

(iv) ஆட்கள் மற்றும் உடைமைகள் தொடர்பான சேதத்தின் அளவு யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0655/ '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) துறைமுகங்கள் விமானசேவைகள் அமைச்சிற்காகவும் அவ்வமைச்சுக்குச் சொந்தமான ஏதேனும் கம்பனிக்காகவும் கடந்த 4 வருடங்களாக இற்றைவரையில் வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஒவ்வொரு வாகனத்தினதும் மொத்தச் செலவினை வருடாந்த அடிப்படையிலும், அலுவலக இடத்திற்காக வாடகைக்கு அமர்த்துவதற்கு செலவிடப்பட்ட மொத்தத் தொகையினையும் அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) இக்காலப்பகுதியில் இவ்வாகனங்களுக்கான எரிபொருளுக்கென செலவிடப் பட்ட மொத்தத் தொகையினை அமைச்சின் மொத்த மீண்டெழும் செலவின் நூற்றுவீதமாகவும்,

(ii) வாடகைக்குப் பெறப்பட்ட அலுவலக இடத்தின் ஒரு சதுர அடிக்கான செலவினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) குத்தகைக்கு கட்டிடம் பெறப்பட்ட காலத்தினையும் அதற்கு வைப்புப்பணமாகச் செலுத்தப்பட்ட முற்பணத்தையும் அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## 2009, சனவரி 20, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0608/ '08

கௌரவ, காமினி ஜயவிக்கிரம பெரேரா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2001 ஆம் ஆண்டு பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னர் ஆட்சியிலிருந்த அரசாங்கம் அரச வங்கிகளிலிருந்து பெற்றுக்கொண்டிருந்த கடன் தொகை எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி கடன்தொகை பெற்றுக்கொள்ளப்பட்ட ஆண்டுகள் வெவ்வேறாக யாதென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2001 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஆட்சி பீடமேறிய அரசாங்கம் அரச வங்கிகளிலிருந்து ஏற்கனவே பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த கடன் தொகைகளை முழுமையாக மீளச் செலுத்தியதா என்பதையும்,

(ii) இல்லையெனில், மேற்படி அரசாங்கத்தின் காலத்தில் செலுத்தப்படாமல் எஞ்சியிருந்த வங்கிக் கடன் தொகை யாதென்பதையும்,

(iii) 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலின் மூலம் ஆட்சிக்கு வந்த அரசாங்கம், 2004 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை அரச வங்கிகளிலிருந்து பெற்றுக் கொண்ட கடன் தொகைகள் ஒவ்வொரு வருடத்திற்கேற்ப வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0747/ '08

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) சேனை விவசாயி இன்று மிகவும் அநாதரவான நிலைக்கு உள்ளாகி, வாழ முடியாமல் உயிரை மாய்த்துக்கொள்ளும் நிலைக்கள்ளாகியுள்ளார் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) இன்று சேனை விவசாயி ஒரு மூடை உரத்தை ரூபா 6000 விலையில் கொள்வனவு செய்ய வேண்டிய நிலையில் உள்ளார் என்பதையும் மரக்கறி வகைகளுக்கு பயன்படுத்தப்படும் அனைத்து இரசாயன மருந்துகளின் விலைகளும் மிகவும் அதிகரித்துள்ளது என்பதையும் அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) இன்று நாட்டுக்குத் தேவையான மரக்கறிகளில் 60% மானவற்றை சேனை விவசாயிகளே வழங்கி வருவதனால் அவர்களுக்கும் 50 கிலோ உரமூடையொன்றை ரூ. 350 வுக்கும் ஏனைய இரசாயன மருந்து வகைகளை அதற்கு சமமான விலைகளிலும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்,

(ii) அவ்வாறு எனின், அது எப்போது தொடக்கம் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0715 / ’08

கௌரவ பேமசிறி மானகே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2008.07.09 ஆம் திகதியன்று இலங்கை மத்திய போக்குவரத்து சபையும் புகையிரத திணைக்களமும் பயணிகள் போத்துவரத்தின் மூலமாக ஈட்டிய வருமானம் எவ்வளவென்பதையும்,

(ii) அன்று பயணிகள் போக்குவரத்துக்காக இலங்கை மத்திய போக்குவரத்து சபையும் புகையிரத திணைக்களமும் செலவிட்ட தொகை எவ்வள வென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(ஆ) (i) 2008.07.10 ஆம் திகதியன்று இலங்கை மத்திய போக்குவரத்து சபையும் புகையிரத திணைக்களமும் பயணிகள் போத்துவரத்தின் மூலமாக ஈட்டிய வருமானம் எவ்வளவென்பதையும்,

(ii) அன்று பயணிகள் போக்குவரத்துக்காக இலங்கை மத்திய போக்குவரத்து சபையும் புகையிரத திணைக்களமும் செலவிட்ட தொகை எவ்வள வென்பதையும் ,

அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0733 / ’ 08

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 1994 ஆம் ஆண்டில் இலங்கைக் கடற்றொழில் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமாக இருந்த குளிரறைகளின் எண்ணிக்கை எத்தனை,

(ii) 2008 ஆம் ஆண்டு யூன் மாதமளவில் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான தொழிற்படும் குளிரறைகளின் எண்ணிக்கை எத்தனை,

(iii) குளிரறைகள் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளனவா,

(iv) அவ்வாறாயின் அவற்றின் எண்ணிக்கை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குளிரறைகள் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளவர்களின் பெயர் மற்றும் முகவரி யாவை,

(ii) தனியார்துறையினால் நடத்தப்படும் குளிரறைகளின் எண்ணிக்கை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0734 / ’08

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) ‘நாரா’ நிறுவனத்துக்குச் சொந்தமான ‘சயுறி’ கப்பல் மற்றும் அதில் பொருத்தப்பட்டிருந்த நீர்மானி உபகரணங்களின் காப்புறுதித் தொகை எவ்வளவு,

(ii) ‘சயுறி’ கப்பல் மற்றும் ‘நீர்மானி’ உபகரணங்கள் சுனாமியினால் அழிந்ததன் பின்பு கிடைத்த காப்புறுதி இழப்பீட்டுத்தொகை எவ்வளவு,

(iii) 'நாரா' நிறுவனத்தின் சொத்துக்களில் கப்பலின் பெறுமதி எத்தனை வீதம்,

(iv) கப்பல் காப்புறுதி செய்யப்பட்டது முதல், இழப்பீட்டைப் பெறும்வரையிலான செயற்பாடு தொடர்பாக அமைச்சு விசாரணையொன்றை நடாத்தியுள்ளதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0772/ '08

கௌரவ ஆர்.எம்.ரஞ்சித் மத்தும பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அநுராதபுரம் , பேமடுவ, இலக்கம் 26 இல் வதியும் திருமதி எஸ். ஏ. சுமித்ரா குமாரி சூரசேன அநுராதபுரம் வலையக் கல்வி காரியாலயத்தில் 2007.04.27 ஆம் திகதியன்று நடைபெற்ற 2007 – தொண்டர் ஆசிரியர்களை சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளாரென்பதையும்,

(ii) அவர் 2000 ஆம் ஆண்டிலிருந்து 2005 வரை தந்திரிமலை, அ/கிம்புல் வெவ ஆனந்த வித்தியாலயத்தில் தொண்டர் ஆசிரியையாக சேவையாற்றியுள்ளாரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) திருமதி சூரசேன மேற்படி பதவிக்கான அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்துள்ளாரென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இவருக்கு தொண்டர் ஆசிரியர் பதவி வழங்குவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0644 / ' 08

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) தமிழ் மக்களின் தனித்துவமானதொரு மருத்துவ முறையாகிய சுதேச சித்த வைத்திய முறைக்குரிய மருத்துவர்கள் எத்தனைபேர் தற்போது அரசாங்க வைத்தியசாலைகளில் (மாகாண சுகாதார சேவையும் அடங்கலாக) பணியாற்றுகின்றனர்,

(ii) அவ்வைத்தியசாலைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மீளாய்வுகளின் மூலம் இனங்காணப்பட்டவாறு மேற்படி சித்த மருத்துவர்கள் எத்தனைபேர் அரசாங்க வைத்தியசாலைக்கு (மாகாண சுகாதார சேவை அடங்கலாக) தேவைப்படுகின்றனர்,

(ii) தமிழ் மக்கள் பெருமளவில் வாழ்கின்ற இனங்காணப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளுக்குத் தேவையான சித்த மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனரா,

(iii) பாதுகாப்புப் பிரிவினரால் விடுவிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் அடங்கலாக சகல பிரதேசங்களுக்கும் சித்த மருத்துவர்களை நியமிப்பதற்கு எவ்வளவு காலவரையறைக்குள் நடவடிக்கை எடுக்கப்படும்

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0645/ '08

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) முஸ்லிம் மக்களுக்கு தனிச்சிறப்புடையதான சுதேச மருத்துவ சிகிச்சை முறையான யுனானி மருத்துவர்கள் எத்தனை பேர் தற்போது (மாகாண சுகாதார சேவை அடங்கலாக) அரசாங்க வைத்தியசாலைகளில் பணியாற்றி வருகிறார்கள் என்பதை சம்பந்தப்பட்ட வைத்தியசாலைகளின் விபரங்களுடன் அவர் இச் சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) ஆய்வொன்று மூலமாக இனங்காணப்பட்ட வகையில் தேவைப்படுகின்ற யுனானி மருத்துவர்களின் எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 23 பிரதேச செயலகப் பிரிவுகளிலேயே முஸ்லிம் மக்கள் செறிவாக வசிப்பதாக இனங்காணப்பட்டுள்ளமையால் தேவைப்படுகின்ற யுனானி மருத்துவர்களின் எண்ணிக்கை 23 பேர்கள் என்பதையும்,

(ii) சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் ஆகிய மூவினங்களும் கிட்டத்தட்ட சமமாக வசிக்கின்ற ஒருசில பிரதேச செயலகங்களுக்காக ஆயுர்வேத, சித்த மற்றும் யுனானி மருத்துவர்கள் மூவர் தேவையென்பதையும்,

(iii) முஸ்லீம்கள் பெரும்பான்மையினராக வசிக்கும் ஒருசில பிரதேசங்களில் மருத்துவ நிலையங்களுக்குக்கூட (உதாரணமாக மட்டக்களப்பு) யுனானி மருத்துவர்கள் நியமிக்கப்படவில்லையென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) மருத்துவக் கல்லூரியிலிருந்து வருடந்தோறும் சித்தியடைகின்ற யுனானி மருத்துவர்களுக்குத் தொழில் வழங்கி முஸ்லிம் நோயாளிகளுக்கு அவசியமான சிகிச்சைகளை வழங்க எவ்வளவு காலப்பகுதிக்குள் நடவடிக்கை மேற்கொள்வா ரென்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

---

## 2009, சனவரி 21, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0705/ '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2006 ஆம் ஆண்டு சனவரி 1 ஆம் திகதியிலிருந்து இற்றைவரை கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை என்ன என்பதையும்,

(ii) இது சம்பந்தமாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iii) கொலைகாரர் யாரும் அடையாளம் காணப்பட்டுள்ளனரா அல்லது தடயம் எதுவும் கிடைத்துள்ளதா என்பதையும்,

(iv) அவ்வாறாயின், அவர்களின் பெயர்கள் என்ன என்பதையும், இற்றைவரை எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கை என்ன என்பதையும்,

(v) தாக்கப்பட்ட மற்றும் கடத்தப்பட்ட ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை என்ன என்பதையும்,

(vi) விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா மற்றும் அவர்களில் யாரும் நீதிமன்றம் முன் நிறுத்தப்பட்டுள்ளனரா என்பதையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) 2007 ஆம் ஆண்டு திசெம்பர் 27 ஆம் திகதி வெளியார் சிலரினால் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் தாக்கப்பட்டதை அவர் அறிவாரா?

(இ) (i) மேற்படி வெளியாட்களின் பெயர்கள் என்ன என்பதையும், அதில் சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகளின் பெயர்கள் என்ன என்பதையும்,

(ii) ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்குள் நுழைந்து, பணியாட்களைத் தாக்கிய ஆட்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதையும்,

(iii) விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டனவா என்பதையும்,

(iv) அவ்வாறாயின் நீதிமன்றத்தில் குற்றம் சுமத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை என்ன என்பதையும்,

(v) இச்சம்பவத்தினால் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட இழப்பு எவ்வளவு என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0718/ '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) சனாதிபதி நிதியத்தின் உறுப்பினர்களின் பெயர்களையும்,

(ii) அது அமைக்கப்பட்ட திகதியையும்,

(iii) நிதியத்தின் தற்போதைய உறுப்பினர்களின் பதவிக்காலத்திற்கு உடன் முன்னிருந்த உறுப்பினர்களின் பெயர்களையும்

அவர் சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த 5 வருடங்களாக சனாதிபதி நிதியத்தின் ஊடாக ஏற்பட்ட செலவினை ஒவ்வொரு செலவுத் தலைப்பின் பெயருடனும்,

(ii) கடந்த 5 வருடங்களாக ஏற்பட்ட ரூபா 100,000/= க்கு மேற்பட்ட செலவினங்களை வருடாந்த அடிப்படையிலும்,

(iii) சனாதிபதி நிதியத்திற்கான வருமான மூலத்தையும்,

(iv) கடந்த ஐந்து வருடங்களாக இற்றைவரைக்கும் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானத்தை வருடாந்த அடிப்படையிலும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) கணக்குகள் கடைசியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட திகதியை கணக்காய்வு அறிக்கைகளுடன் அவர் சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஈ) (i) கடந்த 5 வருடங்களாக இற்றைவரைக்கும் அரசியல்வாதிகளுக்கு செலுத்தப்பட்ட தொகையை வருடவாரியாகவும் அச்செலவினங்களுக்கான காரணங்களுடனும்,

(ii) கடந்த வருடத்திலிருந்து இற்றைவரைக்கும் அரசியல்வாதிகளிடமிருந்து வந்த கோரிக்கைகளுள் மறுக்கப்பட்டவற்றின் எண்ணிக்கையையும்,

(iii) அவர்களின் பெயர்களையும், மறுக்கப்பட்டதற்கான காரணத்தையும்

அவர் தெரிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0652/ '08

கௌரவ எம். டீ. நாமல் கருணாரத்ன,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) குருணாகல் மாவட்டத்தின் பொல்பித்திகம பிரதேச செயலகப் பிரிவில் மடஹபொல, மெதகந்த மற்றும் பரகஹஎல மலைகளை அண்மித்துள்ள பிரதேசத்திலுள்ள அரச காணிகள் மற்றும் தனியார் காணிகள் சம்பந்தமான விரிவான அறிக்கையொன்றையும், மடஹபொல மெதகந்த மற்றும் பரகஹஎல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வதியும் விவசாயிகளது காணிகளின் உரிமை சம்பந்தமான சட்ட ரீதியான தன்மை யாது எனும் விபரத்தையும் அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(ஆ) மடஹபொல மற்றும் மெதகந்த கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் 50 ஏக்கர் காணிக்கு உரிமை இருப்பதாகக் கூறிக்கொள்ளும் நபரொருவர் மேற்படி காணிகளில் வசிப்பவர்களை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றா ரென்பதை அவர் அறிவாரா ?

(இ) (i) அத்தகைய தனியார் காணியொன்று மேற்படி கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அக்காணியின் அளவும், தன்மையும் யாதென்பதையும்,

(iii) மேற்படி காணியின் முதலாவது உரிமையாளர் தொடக்கம் இன்றைய உரிமையாளர் வரையிலான உரித்தறிக்கை என்னவென்பதையும்,

(iv) எவரேனும் தனியார் காணி உரிமையாளர் மேற்படி கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வதியோரை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பின் அவர்களுக்கு மாற்றுக்காணிகள் பெற்றுத்தரப்படுமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0775 / '08

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2008.07.22 ஆம் திகதி, இரவு வேளையில், தெற்கு மற்றும் மேற்கு கடற் பரப்பில் ஏற்பட்ட சூறாவளி காரணமாகக் கடற்றொழிலாளர்கள் பெரும் பாதிப்புகளுக்கு முகம் கொடுத்தார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி சூறாவளியின் விளைவாக மரணமடைந்த மற்றும் காணாமற் போன கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவர்களின் பெயர் மற்றும் முகவரி யாதென்பதையும்,

(iii) பாதிக்கப்பட்ட கடற்றொழில் வள்ளங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iv) மேற்படி வள்ளங்களின் உரிமையாளர்களினது பெயர்கள் மற்றும் முகவரிகள் யாதென்பதையும்,

(v) காணாமற்போனவர்களினதும் மரணமடைந்தவர்களினதும் குடும்ப அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணங்கள் யாவையென்பதையும்.

(vi) பாதிக்கப்பட்ட கடற்றொழில் வள்ளங்களையும் உபகரணங்களையும் திருத்துவதற்கு வழங்கப்பட்ட உதவிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0776/ '08

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) தெவிநுவர பிரதேச செயலகப் பிரிவிற்குச் சொந்தமான தெவிநுவர தெற்கு கிராம சேவையாளர் பிரிவில், கடலுக்கு மிகவும் சமீபமாக அமைக்கப்பட்டுள்ள "லயிட் ஹவுஸ்" ஹோட்டலின் உரிமையாளரின் பெயர் மற்றும் முகவரி யாதென்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி ஹோட்டல் அமைக்கப்பட்ட போது கரையோரப் பாதுகாப்பு சட்டத்தின் ஏற்பாடுகள் மீறப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(இ) (i) கடற் கரையில் ஏதேனும் நிருமாணப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமாயின் அதற்கான அனுமதிப்பத்திரத்தை எத்திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதையும்,

(ii) அதற்கமைவாக, மேற்படி நிருமாணப் பணிக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) அச்சந்தர்ப்பத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சுப் பொறுப்பினை வகித்தது யாரென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா ?

(ஈ) மேற்படி நிருமாணப் பணி சட்ட விரோதமானதென்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(உ) ஆமெனில், இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

0777/ '08

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கையில் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள நீர்த்தேக்கங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி கைத்தொழிலில் ஈடுபடுகின்ற மீனவர்களின் எண்ணிக்கை மற்றும் மீனவக் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வள்ளங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா ?

(ஆ) நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலை மேம்படுத்த அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0738/ '08

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு.—

(அ) (i) "ஒரு பிரதேச செயலகத்திற்கு ஒரு கைத்தொழிற்சாலை" என்ற 'மகிந்த சிந்தனை' கொள்கை திட்டத்தின் கீழ் காலி மாவட்டத்தில் உள்ள 19 பிரதேச செயலகங்களுக்காக எத்தனை தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன என்பதையும்,

(ii) அந்தப் பரிதேச செயலகங்கள் எவை என்பதை முறையே அவற்றின் பெயர்களையும்,

(iii) ஆரம்பிக்கப்பட்டுள்ள பிரதேச செயலகங்களின் உற்பத்தி எவை என்பதையும்,

(iv) அந்தக் கைத்தொழிற்சாலை உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் எவை என்பதை வெவ்வேறாகவும்,

(v) ஒவ்வொரு தொழிற்சாலையின் பொருட்டு 'மகிந்த சிந்தனை' திட்டத்தின் கீழ் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சினால் எவ்வளவு தொகை ஒதுக்கப் பட்டுள்ளது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அந்த ஒவ்வொரு கைத்தொழில்களின் பொருட்டும் கைத்தொழிற்சாலை உரிமையாளர்கள் எவ்வளவு தொகையை முதலீடு செய்துள்ளார்கள் என்பதையும்,

(ii) உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கு மேலதிகமாக வெளிநாட்டு முதலீட்டா ளர்களும் இருக்கின்றார்களா என்பதையும்,

(iii) அவ்வாறெனில், அது எந்தெந்த கைத்தொழில்களுக்காக என்பதையும்

வெவ்வேறாக அவர் இசசபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) 2008 ஆம் ஆண்டளவில் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சில் பதிவு செய்யப் பட்டுள்ள காலி மாவட்டத்தில் தற்போது நடைறையில் உள்ள நடுத்தர அளவிலான கைத்தொழில்கள் எவை என்பதை விபரமாக அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0742/ '08

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) காலி மாவட்டத்தின் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் (இ.போ.ச.) உடுகம டிப்போவுக்குச் சொந்தமான பேருந்து வண்டிகளின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) மேற்படி பேருந்து வண்டிகளில் சேவையிலீடுபடுத்தக் கூடியவற்றின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) சிறு திருத்தங்களின் பின்னர் சேவையில் ஈடுபடுத்தக்கூடிய பேருந்து வண்டிகளின் எண்ணிக்கை எவ்வளவு,

(iv) சேவையில் ஈடுபடுத்த முடியாத பேருந்து வண்டிகளின் எண்ணிக்கை எவ்வளவு,

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி டிப்போவில் டிப்போ அத்தியட்சகரில் இருந்து சாதாரண ஊழியர் வரை எவ்வளவு பணியாளர்கள் இருக்கின்றார்கள் என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) சாரதிகள், நடத்துனர்கள் மற்றும் இரவு நேர சேவையில் ஈடுபடுகின்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்குத் தேவையான விடுதி வசதிகள் மிகவும் திருப்தியற்ற நிலையில் உள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) அனைத்து ஊழியர்களுக்கும் தேவையான சுத்தமான குடிநீர் உள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இவர்களுக்குத் தேவையான உணவக வசதிகள் ஒழுங்காக இல்லையென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஊ) மிக நீண்ட காலமாக மிகக் குறைந்த வசதிகளுடன் மிகவும் உயர்வானதொரு சேவையை வழங்குகின்ற மேற்படி டிப்போவின் ஊழியர்களுக்கு மேலே குறிப்பிட்டுள்ள குறைந்த வசதிகளை நிறைவு செய்தல் எவ்வளவு காலத்தினுள் நடைபெறும் என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(எ) இன்றேல், ஏன்?

0744 / '08

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2005 ஆம் ஆண்டளவில் எத்தனை பாதைகளுக்கு கா/உடுகம இலங்கை போக்குவரத்துச் சபை (ஸ்ரீலங்கம) டிப்போவுக்குச் சொந்தமான பஸ் வண்டிகளை ஓட்டுவதற்கான பாதை அனுமதிப் பத்திரங்கள் (நேர அட்டவணைகள்) இருந்தன வென்பதை விபரமாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பழைய நேர அட்டவனணகளுக்கு அமைய 2008 யூலை மாதளவில் எத்தனை பாதைகளில் பஸ் வண்டிகள் சேவையிலீடுபடுத்தப்படுகின்றன,

(ii) பழைய நேர அட்டவணைகளுக்கு அமைய எத்தனை பாதைகளில் பஸ்வண்டிகள் சேவையிலீடுபடுத்தப்படுவது ஏற்கெனவே நிறுத்தப் பட்டுள்ளது,

(iii) இதில் தாக்கமேற்படுத்தியுள்ள காரணங்கள் யாவை,

(iv) கொழும்பு நோக்கி ஓட்டப்பட்ட பயணச் சுற்றுக்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளதா,

(v) உடுகம – மண்டலபுர, நெலுவ, வாறுகந்தெனிய மற்றும் தவலம ஹல்விட்டிகல குடியேற்றத் திட்டம் வரை பயணஞ்செய்த பஸ் வண்டிகள் உரிய வகையில் ஓட்டப்படுகின்றனவா,

(vi) பாடசாலைப் பிள்ளைகள் பயணஞ் செய்யக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்த பயணச்சுற்றுகள் குறைக்கப்படாமல் ஓட்டப்படு கின்றனவா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) வினைத்திறன்மிக்க டிப்போவாக விளங்கிய உடுகம டிப்போவின் பஸ் வண்டிப் பயணச்சுற்றுகளை பாடசாலை மாணவர்களுக்கும் மக்களுக்கும் வசதியாக அமையக்கூடியவாறு திருத்தியமைப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0603/ '08

கௌரவ ஆர்.பி.ஏ. ரணவீர பதிரன,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கம உற்பத்திகள் சந்தைப்படுத்தல் அதிகார சபை என்ற பெயரில் ஒரு நிறுவனம் தாபிக்கப்பட்டுள்ளதா,

(ii) ஆமெனில், அது எந்த மாவட்டத்தில் செயற்படுகின்றது,

(iii) மேற்படி அதிகார சபையினால் எவ்வகையான உற்பத்திகள் கொள்வனவு செய்யப்படுகின்றன,

(iv) கொள்வனவு செய்யப்படும் ஒவ்வொரு உற்பத்தி வகையின் பொருட்டும் எவ்வளவு பணத்தொகை ஒதுக்கப்பட்டுள்ளது,

(v) செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குறித்த அதிகார சபையினால் ஒவ்வொரு ஆண்டிலும் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு தனித்தனியாக எவ்வளவு,

(ii) ஒவ்வொரு வகை நெல்லிலும் எவ்வளவு தொகை எந்த விலையில் கொள்வனவு செய்யப்பட்டது,

(iii) இவை எந்த நோக்கத்திற்காக் கொள்வனவு செய்யப்பட்டன,

(iv) இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட நெல் எவ்விடயத்திற்காகப் பயன் படுத்தப்பட்டது,

(v) அவை தனியார் கொள்வனவாளர்களுக்கு விற்பனை செய்யப்பட்டதா,

(vi) ஆமெனில், கொள்வனவாளர்களது பெயர், முகவரி, கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு, நெல் வகை, ஒரு கிலோ நெல்லின் விலை மற்றும் விற்பனை செய்யப்பட்ட திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0606/ '08

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) விசேட கருத்திட்ட அமைச்சுக்காக 2007 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) நடைமுறைச் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா. 37500,000/ = எப்போதிருந்து செலவிடப்படுகிறது என்பதையும்,

(ii) 2007 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(iii) நடைமுறைச் செலவுகளைப் பயன்படுத்தி கொள்வனவுகள் செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iv) அவ்வாறெனின், எத்தகைய பொருட்கள் எந்தெந்த விலை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டன என்பதையும்,

(v) மூலதனச் செலவுகளுக்கான ரூபா. 10800,000/= நிதி ஒதுக்கத்திலிருந்து குறிப்பிட்ட கருத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(vi) அந்தப் பணத்தில் எவ்வளவு தொகை செலவிடப்பட்டுள்ளது என்பதையும்,

(vii) ஒவ்வொரு கருத்திட்டத்திற்காகவும் ஒதுக்கப்பட்ட மற்றும் செலவிடப்பட்ட தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்
**(2009, சனவரி 21, புதன்கிழமை)**

0955/ '08

கௌரவ சந்திரசேன விஜேசிங்ஹ;— தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) ஒன்றிணைந்த தபால் சேவையின் "அ" பிரிவில் 3 "ஆ" தரத்துக்கு பதவி உயர்த்துவதற்கான நேர்முகப்பரீட்சை 2005.10.12, மற்றும் 2005.10.13 ஆம் திகதிகளில் தபால் தலைமையகத்தில் நடைபெற்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) இந் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றிய ஒன்றிணைந்த தபால் சேவையின் "அ" பிரிவில் 3 "ஆ" தரத்திலுள்ள பிரதான தபாலதிபதி, நிருவாக உதவியாளர், தபாலக புலனாய்வுப் பரிசோதகர், தபாலக கணக்குப் பரிசோதகர்கள் ஆகியோரின் பெயர், அலுவலக முகவரி ஆகியவை யாவையென அவர் குறிப்பிடுவாரா?

(இ) இந் நேர்முகப்பரீட்சையில் அலுவலகரின் சேவை மூப்பு, சேவை அறிக்கை மற்றும் நேர்முகப்பரீட்சையில் காட்டிய திறன்கள் /ஆளுமை ஆகியவற்றின் கீழ் இவர்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகளை வெவ்வேறாக அவர் சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0902/'08

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) காலி மாவட்டத்தில் எல்பிட்டிய கல்வி வலயத்தில் தற்போது இயங்கி வருகின்ற பாடசாலைகளின் எண்ணிக்கை யாது,

(ii) ஒவ்வொரு கல்விக்கோட்டவாரியாக அவற்றின் பெயர்கள் யாவை,

(iii) மேற்படி ஒவ்வொரு பாடசாலைக்கும் தேவையான ஆசிரியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு,

(iv) மேற்படி ஒவ்வொரு பாடசாலையிலும் தற்போது பணியாற்றிவரும் ஆசிரியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கல்வி வலயத்திற்குச் சொந்தமாகவிருந்து மூடப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை கல்விக்கோட்ட வாரியாக எவ்வளவு,

(ii) அப்பாடசாலைகள் எவ்வாண்டில் மூடப்பட்டன,

(iii) சம்பந்தப்பட்ட பாடசாலைகள் மூடப்பட்டமைக்கான காரணங்கள் யாவை

என்பதை இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) ஏதேனுமொரு காரணத்தின் நிமித்தம் மூடப்படவிருந்த பாடசாலைகளை மூடப்படும் அபாயத்திலிருந்து தடுக்க அவசியமான பௌதீக வளங்கள், மனித வளங்கள் மற்றும் பிற வசதிகளை வழங்கவும் பாடசாலைகள் மூடப்படுவதைத் தடுக்கவும் அவசியமான ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்வாரா வென்பதையும் அவர் குறிப்பிடுவாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0903/'08

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) காலி மாவட்டத்தில் அம்பலாங்கொட கல்வி வலயத்தில் தற்போது செயற்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) ஒவ்வொரு கல்விக் கோட்ட அடிப்படையில் அவற்றின் பெயர்கள் யாவை,

(iii) இந்த ஒவ்வொரு பாடசாலைக்கும் தேவைப்படும் ஆசிரியர்ளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு,

(iv) இந்த ஒவ்வொரு பாடசாலையிலும் தற்போது பணியாற்றும் ஆசிரியர்ளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) இக்கல்வி வலயத்துக்குச் சொந்தமாக இருந்து மூடப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு கல்விக் கோட்ட அடிப்படையில் எவ்வளவு,

(ii) இப்பாடசாலைகள் எந்த ஆண்டில் மூடப்பட்டன,

(iii) இப்பாடசாலைகள் மூடப்படுவதற்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) ஏதேனுமொரு காரணத்தினால் மூடுவதற்கு உத்தேசிக்கப்பட்ட பாடசாலைகள் மூடப்படும் அபாயத்திலிருந்து தவிர்க்கத் தேவையான பௌதிக மனித வளங்களையும் ஏனைய வசதிகளையும் வழங்குவதற்கும் மற பாடசாலை மூடப்படுவதைத் தவிர்ப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2009, சனவரி 22, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

0720/ '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) திறைசேரியினால் ஓட்டல் டெவெலொபர்ஸ் (லங்கா) லிமிடெட் இற்கு (ஹில்டல் ஓட்டல்) வழங்கப்பட்ட கடன்களின் தொகை எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) திறைசேரிக் கடிதங்களின் பிரதிகளை தனித்தனியாக சபாபீடத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் ஒவ்வொரு கடன் தொடர்பான பின்வரும் தகவல்களை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(i) கடன் பெற்றுக்கொண்ட திகதியும் தொகையும்,

(ii) வட்டி வீதமும் மீள்செலுத்துகை நிபந்தனைகளும்,

(iii) முதலை மீள்செலுத்துவது தொடர்பான நிபந்தனைகள்,

(iv) இன்றுவரை பெற்றுக்கொண்ட வட்டி,

(v) இன்றுவரை செலுத்த வேண்டியுள்ள முதல் மற்றும் வட்டி ஆகியவற்றின் நிலுவை

(இ) (i) மேற்குறிப்பிடப்பட்ட கடன்கள் மீளச்செலுத்தத் தவறிய கடன்களையும் உள்ளடக்கியுள்ளதா என்பதையும்,

(ii) 2008 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கடன்களின் தொகை, திகதி, நிபந்தனைகள் ஆகியவற்றையும்,

(iii) மேற்படி கடன்கள் மற்றும் வட்டி ஆகியன திறைசேரியினால் எவ்வாறு மீள்அறவிடப்பட்டிருக்கின்றன என்பதையும்,

(iv) இவ்ஓட்டலைக் கட்டுவதற்கு ஆரம்பத்தில் திட்டமிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும், பின்னர் உண்மையில் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(v) இன்றுள்ளவாறு இவ்ஓட்டலின் தேரிய பெறுமதி என்னவென்பதையும்,

(vi) இவ்ஓட்டல் அமைந்துள்ள காணியின் மொத்த பரப்பளவு என்னவென்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0721/ '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் கீழான செலவுத் தலைப்புக்கள் 801 மற்றும் 240 ஆகியவற்றில் ஏற்பட்ட எல்லாச் செலவினங்களையும் தனித்தனியாக அவர் சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) இந்த மாற்றங்களின் திகதி என்ன என்பதையும், இவை எவ்வாறு பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டன என்பதையும்,

(ii) மேலே (அ) வின்படி ஏற்பட்ட எல்லாச் செலவினங்களிலும் ரூபா 150 மில்லியனை விஞ்சிய செலவினம் எவை என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0735/ '08

கௌரவ பேமசிறி மானகே,— சுற்றாடல், இயற்கைவளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கையில் தேக்கு மரச் செய்கை எத்தனை ஹெக்டயார்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) மேற்படி செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை யென்பதையும்,

(iii) கடந்த பத்து வருடங்களில், மொனறாகலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் தேக்கு மர விற்பனையின் மூலம் கிடைத்த வருமாணம் வெவ்வேறாக யாதென்பதையும்,

(iv) மேற்படி காலகட்டத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சுப் பதவிகளை வகித்த அமைச்சர்கள் யாரென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0862/ ’08

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இலங்கை வட கடல் வலயத்தில் எமது நாட்டுக்குச் சொந்தமான கடல் எல்லை, கடற் கரையிலிருந்து எவ்வளவு தொலைவில் அமைந்துள்ளதென்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வடக்குக் கடல் எல்லை தொடர்பாக “சார்க்” மாநாட்டில் ஏதேனும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் யாவை என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இந்திய மீனவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் மீன்பிடியில் ஈடுபடுவது தொடர்பாக தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0885/ ’08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) பிலியந்தலை நாம்பமுனுவையில் நிர்மாணிக்கப்பட்ட டயலொக் தொலைத் தொடர்புகள் கோபுரம் குடியிருப்புக்கள் அதிகாமாக உள்ள பிரதேசத்தில் அமைந்துள்ளது என்பதையும்,

(ii) 2008.06.29 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்றில் மின்னல் தாக்கியதன் காரணமாக கோபுரத்தை அண்மித்த பகுதியில் இருக்கும் வீடுகளில் இருந்த இலத்திரனியல் ஆழித்தொகுதி, வீட்டுப்பாவனை மின்சார உபகரணங்கள் மற்றும் தொலைபேசிகள் என்பவற்றுக்கு கடும் சேதங்கள் ஏற்பட்டுள்ளதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இந்த சம்பவம் தொடர்பாக பிரதேச மக்களின் கையெழுத்துக்கள் இடப்பட்ட மனுக்கள் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு மற்றும் டயலொக் நிறுவனம் உட்பட பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளன என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) இந்த தொலைத்தொடர்பு கோபுரத்தை நிர்மாணிப்பதற்கான அனுமதியை வழங்கும் போது ஆராயப்பட்ட விடயங்கள் எவை என்பதையும்,

(ii) அதற்காக அனுமதியைப் பெறவேண்டிய நிறுவனங்கள் எவை என்பதையும்,

(iii) குறிப்பிடப்பட்ட தொலைத் தொடர்பு கோபுரத்தை நிர்மாணிக்க அந்த நிறுவனங்கள் ஊடாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) அந்த வீடுகளின் உபகரணங்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்காக இழப்பீடுகளை வழங்க அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0893/ '08

கௌரவ லக்ஷ்மன் நிபுனஆரச்சி,– பொது நிருவாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) பொல்கொட ஆறும் ஆற்றின் ஒதுக்குப் பிரதேசமும் உரித்தாகின்ற பிரதேச செயலாளர் பிரிவு யாது,

(ii) ஆற்று ஒதுக்குப் பிரதேசத்திற்குரிய அளவை வரைபடம் மேற்படி பிரதேச செயலகத்தில் உள்ளதா,

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அளவை வரைபடங்களில் காட்டப்பட்டுள்ள ஆற்று ஒதுக்குப் பிரதேசங்களில் அநேகமானவற்றை தனியார் உரித்தாக்கிக் கொண்டுள்ளனர் என்பதையும்,

(ii) அவற்றில் கட்டிடங்கள்கூட நிர்மாணிக்கப்பட்டுள்ளன என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) பொல்கொட ஆறு மற்றும் ஆற்றின் ஒதுக்குப் பிரதேசத்தில் எஞ்சியுள்ள இடங்களைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0898/ '08

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) தின்ம கழிவுப் பொருள் முகாமைத்துவ கருத்திட்டத்திற்காக புலத்கொஹுபிட்டிய பிரதேச சபையினால் புலத்கொஹுபிட்டிய, வேகல்ல, உடஹவத்தயில் வதியும் திரு. எச். பி. தயாநந்தவுக்குரிய 4 ஏக்கர் காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், அந்த காணி கையேற்றல் தொடர்பாக சட்ட வழிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iii) காணியின் தற்போதைய பெறுமதியை மதிப்பிட்டது யார் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) புலத்கொஹுபிட்டிய பிரதேச செயலாளர் திரு. பி. சி. டி. சிகேராவினால் இந்த காணியின் மரங்களை தயாநந்தவுக்கு புல/5/6/43 எனும் இலக்கத்தின் கீழ் அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்பட்டுள்ளதையும்,

(ii) குறிப்பிட்ட பிரதேச சபைத் தலைவரின் அழுத்தங்களினால் பொலிஸ் உத்தியோகத்தர்களினால் அந்த மரங்கள் வெட்டப்படுவது நிறுத்தப் பட்டுள்ளது என்பதையும்,

(iii) இது தொடர்பாக மாகாண முதலமைச்சருக்கும் உள்ளூராட்சி ஆணையாளருக்கும் மேன்மைதங்கிய சனாதிபதிக்கும் மற்றும் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளருக்கும் எழுத்து மூலமான முறைப்பாடுகள் செய்யப்பட்டிருப்பினும் நியாயமான தீர்வு கிடைக்கவில்லை என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) இந்த காணியை கொள்வனவு செய்தபோது செய்துகொள்ளப்பட்ட உடன் பாட்டின் படி விற்பனையாளரான திரு. தயாநந்தவுக்கு காணியின் மரங்களை அப்புறப்படுத்திக்கொள்வதற்கு அல்லது அவருக்கு ஏற்பட்டுள்ள அநீதிக்கு தீர்வு வழங்குவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0904/ '08

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) காலி மாவட்டத்தில் உள்ள காலி கல்வி வலயத்தில் தற்போது செயற்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) ஒவ்வொரு கல்விக் கோட்ட அடிப்படையில் அவற்றின் பெயர்கள் யாவை,

(iii) இந்த ஒவ்வொரு பாடசாலைக்கும் தேவைப்படும் ஆசிரியர்ளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு,

(iv) இந்த ஒவ்வொரு பாடசாலையிலும் தற்போது பணியாற்றும் ஆசிரியர்ளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) இக்கல்வி வலயத்துக்குச் சொந்தமாக இருந்து மூடப்பட்டுள்ள பாடசாலை களின் எண்ணிக்கை ஒவ்வொரு கல்விக் கோட்ட அடிப்படையில் எவ்வளவு,

(ii) இப்பாடசாலைகள் எந்த ஆண்டில் மூடப்பட்டன,

(iii) இப்பாடசாலைகள் மூடப்படுவதற்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) ஏதேனுமொரு காரணத்தினால் மூடுவதற்கு உத்தேசிக்கப்பட்ட பாடசாலைகள் மூடப்படும் அபாயத்திலிருந்து தவிர்க்கத் தேவையான பௌதிக மனித வளங்களையும் ஏனைய வசதிகளையும் வழங்குவதற்கும் பாடசாலை மூடப்படுவ தைத் தவிர்ப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள் வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0905/ '08

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) நீர்கொழும்பு – குருநாகல் வீதியிலும் பன்னல - குளியாப்பிட்டி வீதியிலும் பி.ப. 7.00 மணிக்குப் பின்பு தனியார் பஸ் வண்டிகளோ இலங்கை மத்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வண்டிகளோ சேவையில் ஈடுபடுவதில்லை என்பதையும்,

(ii) தொழில் புரிந்து விட்டு மாலை 7.00 மணிக்குப் பின்னர் வீடுகளை நோக்கிச் செல்லும் பெருந்தொகையானோர் இதன் காரணத்தினால் அசௌகரியத் துக்கு உள்ளாகின்றனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) நீர்கொழும்பு – குருநாகல் வீதியிலும் பன்னல – குளியாப்பிட்டி வீதியிலும் பி.ப. 7.00 மணி தொடக்கம் பி.ப. 11.00 மணி வரை பஸ் வண்டிகளை சேவையில் ஈடுபடுத்த அவர் நடவடிக்கை மேற்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

0913/ '08

கௌரவ (திருமதி) சுஜாதா அலஹகோன்,— கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) மாத்தளை கலாசார நிலையமும் அதற்குரிய காணியும் மாத்தளை பிரதேச செயலாளரால் கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சுக்கு முறையாக ஒப்படைக்கப்பட்டுள்ளனவா,

(ii) அவ்வாறு ஒப்படைக்கப்பட்டிருந்தால் அக் காணியின் அளவு எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) கலாசார நிலையத்தில் இட வசதிகள் போதாமையால் இரண்டாம் கட்டமாக மண்டபத்தை நிர்மாணிப்பதற்கு சம்பந்தப்பட்ட கட்டிட அமைப்புத் திட்டமும் மதிப்பீடும் தயாரிக்கப்பட்டது என்பதையும்,

(ii) கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் 2006ஆம் ஆண்டில் அதற்காக அடிக்கல் நாட்டப்பட்டது என்பதையும்,

(iii) இற்றைவரை அது அடிக்கல்லோடு மாத்திரம் நின்றுவிட்டது என்பதையும்

அவர்அறிவாரா?

(இ) (i) அம்மண்டபத்தை நிர்மாணிப்பதில் உள்ள தடை யாது என்பதையும்,

(ii) அத்தடைகளை அகற்றி மண்டபத்தை நிர்மாணிக்க உரிய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2009, சனவரி 23, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

0874/ '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) குருநாகல் மாவட்டத்திலுள்ள தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையினை அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) குருநாகல் மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு ஏப்பிறல் 01 ஆம் திகதி முதல் இற்றைவரையில் புதிதாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு திறந்துவைக்கப் பட்ட வைன் கடைகள், சாராயக் கடைகள், உணவு விடுதிகள் மற்றும் ஹோட்டல்களின் எண்ணிக்கையினையும்,

(ii) அவற்றிலிருந்து 2004 முதல் 2007 ஆம் ஆண்டு வரையிலும் இற்றைவரையும் ஒவ்வொரு வருட முடிவிலும் உள்ளவாறாக கிடைத்த வருமானத்துடன் அவற்றின் பெயர்களை தேர்தல் தொகுதி அடிப்படையில்,

(iii) மேலே (i) இலுள்ள தகவலை 1998 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 இல் உள்ளவாறாகவும் குருநாகல் மாவட்டத்திற்கான மொத்த வருமானத்தினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0058/ '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஏற்றுமதி அபிவிருத்தி, சர்வதேச வர்த்தக அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கடந்த மூன்று வருடங்களில் ஏற்றுமதி அபிவிருத்தி, சர்வதேச வர்த்தக அலுவல்கள் அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுப் பயணங் களின் எண்ணிக்கையையும்,

(ii) விஜயம் செய்த நாடுகளையும், மற்றும்

(iii) பயணச்சீட்டுக்கள் மற்றும் ஹோட்டல் கட்டணங்கள் என்பவற்றின் செலவு களுடன் ஒவ்வொரு பயணத்திற்குமான மொத்தச்செலவை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உடன்சென்ற நபர்களின் எண்ணிக்கையையும்,

(ii) அவர்களின் பெயர்கள் மற்றும் அவர்களுக்கென ஏற்பட்ட செலவுகள் என்பவற்றை வெவ்வேறாகவும், அத்துடன்,

(iii) ஒவ்வொரு வெளிநாட்டுப் பயணத்திற்குமான பிரதான காரணத்தையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) அப்பயணங்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை, மற்றும்

(ii) அப் பயணங்களுக்கென வழங்கப்பட்ட குறை நிரப்புச் செலவினம் என்பவற் றையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0084 / '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறை முகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 'மிஹின் எயார்' கூட்டிணைக்கப்பட்ட திகதியினையும்,

(ii) அதன் முதலாவது வர்த்தக விமானம் சென்ற திகதியையும்,

(iii) 'மிஹின் எயார்' ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து இற்றைவரையிலான அதன் பணிப்பாளர்களின் பெயர்களையும்

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) ஒவ்வொரு நபருக்கும் வழங்கப்பட்ட சம்பளம், மிஹின் விமான சேவையைப் பயன்படுத்த வழங்கப்பட்ட விமானச் சீட்டு, ஏனைய விமானச் சேவைகளைப் பயன்படுத்த வழங்கப்பட்ட விமானச் சீட்டு மேலும் வழங்கப்பட்ட வேறு ஏதாவது நன்மைகள் என்பவற்றை ஒவ்வொரு நபர் அடிப்படையிலும் வருட அடிப்படையிலும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) கொடுக்கப்பட்ட வேறு ஏதாவது நன்மைகளையும் மேலும் கொடுக்கப்பட வேண்டிய வேறு ஏதாவது நன்மைகளையும்,

(ii) இயக்கப்பட்ட நாளிலிருந்து மாதாந்த தேறிய இலாபத்தையும் மொத்த இலாபத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0896/ '08

கௌரவ லக்ஷமன் நிபுணஆரச்சி,— வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) வெலிக்கடை, ராஜகிரியவில் இயங்கிவந்த "லக் சதொச" (பஜட் ஷொப்) நிறுவனக் கட்டிடம் மற்றும் காணியின் உரிமையாளர்கள் யாவர்,

(ii) பஜட் ஷொப் நிறுவனத்தின் உரிமை எவரிடமிருந்தது,

(iii) தற்போது மேற்படி கட்டிடத்தினதும் காணியினதும் உரிமை எவரிடமுள்ளது,

(iv) பஜட் ஷொப் நிறுவனம் இயங்கிவந்த கட்டிடத்தினதும் காணியினதும் உரிமை நிறுவனம் மூடப்பட்ட வேளையில் அற்றுப்போனமைக்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இந்த வளவில் பஜட் ஷொப் நிறுவனத்தை அங்குரார்ப்பணம் செய்தவேளையில் அதன் உரிமை தொடர்பான உடன்படிக்கையில் சம்பந்தப்பட்ட அமைச்சு தலையிட்டதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2009, சனவரி 23, வெள்ளிக்கிழமை)**

0875/ '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) காலி மாவட்டத்திலுள்ள தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையினை அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) காலி மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு ஏப்பிறல் 01 ஆம் திகதி முதல் இற்றைவரையில் புதிதாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு திறந்துவைக்கப் பட்ட வைன் கடைகள், சாராயக் கடைகள், உணவு விடுதிகள் மற்றும் ஹோட்டல்களின் எண்ணிக்கையினையும்,

(ii) அவற்றிலிருந்து 2004 முதல் 2007 ஆம் ஆண்டு வரையிலும் இற்றைவரையும் ஒவ்வொரு வருட முடிவிலும் உள்ளவாறாக கிடைத்த வருமானத்துடன் அவற்றின் பெயர்களை தேர்தல் தொகுதி அடிப்படையில்,

(iii) மேலே (i) இலுள்ள தகவலை 1998 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 இல் உள்ளவாறாகவும் காலி மாவட்டத்திற்கான மொத்த வருமானத்தினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0876/ '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) மாத்தறை மாவட்டத்திலுள்ள தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையினை அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) மாத்தறை மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு ஏப்பிறல் 01 ஆம் திகதி முதல் இற்றைவரையில் புதிதாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு திறந்துவைக்கப் பட்ட வைன் கடைகள், சாராயக் கடைகள், உணவு விடுதிகள் மற்றும் ஹோட்டல்களின் எண்ணிக்கையினையும்,

(ii) அவற்றிலிருந்து 2004 முதல் 2007 ஆம் ஆண்டு வரையிலும் இற்றைவரையும் ஒவ்வொரு வருட முடிவிலும் உள்ளவாறாக கிடைத்த வருமானத்துடன் அவற்றின் பெயர்களை தேர்தல் தொகுதி அடிப்படையில்,

(iii) மேலே (i) இலுள்ள தகவலை 1998 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 இல் உள்ளவாறாகவும் மாத்தறை மாவட்டத்திற்கான மொத்த வருமானத்தினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0877/ '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை யினை அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு ஏப்பிறல் 01 ஆம் திகதி முதல் இற்றைவரையில் புதிதாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு திறந்துவைக்கப் பட்ட வைன் கடைகள், சாராயக் கடைகள், உணவு விடுதிகள் மற்றும் ஹோட்டல்களின் எண்ணிக்கையினையும்,

(ii) அவற்றிலிருந்து 2004 முதல் 2007 ஆம் ஆண்டு வரையிலும் இற்றைவரையும் ஒவ்வொரு வருட முடிவிலும் உள்ளவாறாக கிடைத்த வருமானத்துடன் அவற்றின் பெயர்களை தேர்தல் தொகுதி அடிப்படையில்,

(iii) மேலே (i) இலுள்ள தகவலை 1998 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 இல் உள்ளவாறாகவும் அம்பாந்தோட்டை மாவட்டத்திற்கான மொத்த வருமானத்தினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0878/ '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) பொலன்ன்றுவை மாவட்டத்திலுள்ள தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையினை அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) பொலன்னறுவை மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு ஏப்பிறல் 01 ஆம் திகதி முதல் இற்றைவரையில் புதிதாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு திறந்துவைக்கப்பட்ட வைன் கடைகள், சாராயக் கடைகள், உணவு விடுதிகள் மற்றும் ஹோட்டல்களின் எண்ணிக்கையினையும்,

(ii) அவற்றிலிருந்து 2004 முதல் 2007 ஆம் ஆண்டு வரையிலும் இற்றைவரையும் ஒவ்வொரு வருட முடிவிலும் உள்ளவாறாக கிடைத்த வருமானத்துடன் அவற்றின் பெயர்களை தேர்தல் தொகுதி அடிப்படையில்,

(iii) மேலே (i) இலுள்ள தகவலை 1998 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 இல் உள்ளவாறாகவும் பொலன்னறுவை மாவட்டத்திற்கான மொத்த வருமானத்தினையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0879/ '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையினை அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு ஏப்பிறல் 01 ஆம் திகதி முதல் இற்றைவரையில் புதிதாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு திறந்துவைக்கப் பட்ட வைன் கடைகள், சாராயக் கடைகள், உணவு விடுதிகள் மற்றும் ஹோட்டல்களின் எண்ணிக்கையினையும்,

(ii) அவற்றிலிருந்து 2004 முதல் 2007 ஆம் ஆண்டு வரையிலும் இற்றைவரையும் ஒவ்வொரு வருட முடிவிலும் உள்ளவாறாக கிடைத்த வருமானத்துடன் அவற்றின் பெயர்களை தேர்தல் தொகுதி அடிப்படையில்,

(iii) மேலே (i) இலுள்ள தகவலை 1998 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 இல் உள்ளவாறாகவும் அநுராதபுரம் மாவட்டத்திற்கான மொத்த வருமானத்தினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0880/ '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) களுத்துறை மாவட்டத்திலுள்ள தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையினை அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) களுத்துறை மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு ஏப்பிறல் 01 ஆம் திகதி முதல் இற்றைவரையில் புதிதாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு திறந்துவைக்கப் பட்ட வைன் கடைகள், சாராயக் கடைகள், உணவு விடுதிகள் மற்றும் ஹோட்டல்களின் எண்ணிக்கையினையும்,

(ii) அவற்றிலிருந்து 2004 முதல் 2007 ஆம் ஆண்டு வரையிலும் இற்றைவரையும் ஒவ்வொரு வருட முடிவிலும் உள்ளவாறாக கிடைத்த வருமானத்துடன் அவற்றின் பெயர்களை தேர்தல் தொகுதி அடிப்படையில்,

(iii) மேலே (i) இலுள்ள தகவலை 1998 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 இல் உள்ளவாறாகவும் களுத்துறை மாவட்டத்திற்கான மொத்த வருமானத்தினையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0881/ '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கம்பஹா மாவட்டத்திலுள்ள தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையினை அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) கம்பஹா மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு ஏப்பிறல் 01 ஆம் திகதி முதல் இற்றைவரையில் புதிதாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு திறந்துவைக்கப் பட்ட வைன் கடைகள், சாராயக் கடைகள், உணவு விடுதிகள் மற்றும் ஹோட்டல்களின் எண்ணிக்கையினையும்,

(ii) அவற்றிலிருந்து 2004 முதல் 2007 ஆம் ஆண்டு வரையிலும் இற்றைவரையும் ஒவ்வொரு வருட முடிவிலும் உள்ளவாறாக கிடைத்த வருமானத்துடன் அவற்றின் பெயர்களை தேர்தல் தொகுதி அடிப்படையில்,

(iii) மேலே (i) இலுள்ள தகவலை 1998 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 இல் உள்ளவாறாகவும் கம்பஹா மாவட்டத்திற்கான மொத்த வருமானத்தினையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0882/ '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கொழும்பு மாவட்டத்திலுள்ள தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையினை அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) கொழும்பு மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு ஏப்பிறல் 01 ஆம் திகதி முதல் இற்றைவரையில் புதிதாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு திறந்துவைக்கப் பட்ட வைன் கடைகள், சாராயக் கடைகள், உணவு விடுதிகள் மற்றும் ஹோட்டல்களின் எண்ணிக்கையினையும்,

(ii) அவற்றிலிருந்து 2004 முதல் 2007 ஆம் ஆண்டு வரையிலும் இற்றைவரையும் ஒவ்வொரு வருட முடிவிலும் உள்ளவாறாக கிடைத்த வருமானத்துடன் அவற்றின் பெயர்களை தேர்தல் தொகுதி அடிப்படையில்,

(iii) மேலே (i) இலுள்ள தகவலை 1998 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 இல் உள்ளவாறாகவும் கொழும்பு மாவட்டத்திற்கான மொத்த வருமானத்தினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?